பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 16, செவ்வாய்க்கிழமை 01.08.2017 கதிர் 268

'ஸ்ரீலங்கன்' விமானத்தில் தீ!

கொச்சியில் இருந்து கொழும்பு நோக்கிப் பறந்து கொண்டிருந்த ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானம் பாரிய தீ விபத்து ஒன்றில் இருந்து தப்பியுள்ளது எனக் கூறப்படுகின்றது. ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான UL – 166 என்ற விமானத்தின் பணியாளர்களால் இந்த விபத்து தடுக்கப்பட்டுள்ளது. பக்கம் 18

தமிழர் அரசியல் தரப்புகளிடையே பிளவு, மோதல் என்று ஊடகங்களே மிகைப்படுத்தி, திரிபுபடுத்திக் குழப்புகின்றன

அடிப்படையற்ற செய்திகளை வெளியிடுகின்றன சில யாழ். பத்திரிகைகள் எனச் சாடுகிறார் முதல்வர்



யாழ்ப்பாணம், ஓக.01

"தமிழர்களின் அரசியல் கூட்டில் பிரிவினைகள் உருவாகியுள்ளன, கருத்து மோதல்கள் இடம்பெறுகின்றன என்று பல்வேறு செய்திகளை மிகைப்படுத்தியும் திரித்தும் பொதுசன ஊடகங்களும் – குறிப்பாக வட பகுதியில் இருந்து வெளியிடக் கூடிய சில தமிழ்ப் பத்திரிகைகளும்–வெளியிட்டுவருகின்றன.

"வேறுபாடுகளை மிகைப்படுத்தி பத்திரிகைகளை விற்க எத்தனிப்பது அந்தப் பத்திரிகைகளின் சுய நலத்தையே பிரதிபலிக்கின்றது."

– இவ்வாறு யாழ். பத்திரிகைகள் சிலவற்றைப் பெயர் குறிப்பிடாது காட்டமாக வைகின்றார் வடக்கு மாகாண முதல்வர் சி.வீ. விக்னேஸ்வரன்.

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 52 ஆவதுநிறைவுவிழாவும்கல்விக் கழகப் பரிசளிப்புவிழாவும் நேற்றுத் திங்கட்கிழமை மட்டுவிலில் நடைபெற்ற போது, அங்கு பக்கம் 03

தீர்வு முயற்சியை முறியடிக்கவே வடக்கில் வன்முறைச் சம்பவங்கள்!

திக்கம் கூட்டத்தில் சுமந்திரன் விளக்கம்

பருத்தித்துறை, ஓகஸ்ட் 07

"வடக்கில் வன்முறைச் சம்பவங்கள் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்திருக்கின்றன. அமைதித் தீர்வுக்கு வழிசெய்யும் புதிய அரசமைப்பு முயற்சிகளை முறியடிக்கும் இலக்குடனேயே இவை கட்டவிழ்கின்றன என நாம் கருதுகிறோம்."

- இந்தச் சாரப்பட கருத்து வெளியிட்டிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன். பக்கம் 17

சிவாஜி, பசுபதிப்பிள்ளை, தியாகராஜா மாகாண சபை உறுப்பினர் மூவரிடம் வாக்குமூலம் பெற்றது பொலிஸ்

வட மாகாணசபை உறுப்பினர்கள் மூவர் நேற்று குற்றப்புலனாய்வு பிரிவினரால் யாழ்ப்பாணத்தில் விசாரிக்கப்பட்டு வாக்கு மூலங்கள் அவர்களிடம் பெறப்பட்டன.

மே மாதம் 12 முதல் 18வரை இனப்படுகொலை வாரமாகக் கடைப்பிடிக்கு மாறும் அந்த வாரத்தில் பக்கம் 18

முன்னாள் போராளியான ஆவாக் குழு உறுப்பினரே கொக்குவில் வாள்வெட்டின் பிரதான சூத்திரதாரியாம்

யாழ்ப்பாணம், ஓக.01

"கொக்குவில்பகுதியில் நேற்றுமுன்தினம் இரு பொலிஸாரைக்கலைத்து வாளினால் வெட்டிய குழுவின் பிரதான சூத்திரதாரி முன்னாள் ஆவாக் குழு உறுப்பினர். முன்னாள் போராளி.

"அவரையும்அவருடன் இக்கொடூரத்தில் ஈடுபட்ட வர்களில் அறுவரையும் அடையாளம் கண்டுள்ளோம்."

–இவ்வாறுநேற்றுமுன் தினம் யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகவியலாளர் பக்கம் 03

ரயில்வே ஊழியர்கள் இன்றுமுதல் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம்

கொழும்பு, ஓக.01

சீனாவின் ரயில் பெட்டிகளுடன் கூடிய ரயில்கள் மற்றும் எஸ்.10 இயந்திரங்கள் மூலம் ஓடும் சகல ரயில்களிலும் பணியாற்றும் ஊழியர்கள் இன்று நள்ளிரவுதொடக்கம்பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட வுள்ளனர்.

ரயில் இயந்திர உதவி பக்கம் 18

வாள் வெட்டுக் குழுவை மடக்குவதற்கு பொலிஸ்-படைகள் கூட்டு நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் பொலிஸ்மா அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், ஓக.01

யாழ். குடாநாட்டில் பொலிஸார்மற்றும்படைத் தரப்புக்கே அச்சுறுதல் ஏற்பட்டுள்ள நிலையில், அத்தகைய அச்சுறுத்தலுக்குக் காரணமான சூத்திரதாரிகளைத்தேடிக்கண்டு பிடிக்கும் நடவடிக்கையிலும் சிவில் பாதுகாப்பு ஏற்பாடுகளிலும் பொலிஸாருக்கு இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவை கூட்டாக ஒத்துழைப்பு வழங்கும்.

இந்தத் தகவலை பொலிஸ்மா அதிபர் பூஜித பக்கம் 18

பதவி இழந்தார் 'சிங்கம்–II'

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான சுவிஸ்குமார் தப்பிச்செல்வதற்குஉதவினார் என்ற குற்றச் சாட்டில்தேடப் பட்டுவரும்சப்இன்ஸ்பெக்டர் பக்கம் 18

பிக்குகளின் பெரும் அமைப்பை உருவாக்குகிறது மஹிந்த அணி!

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களைத் தீவிரப்படுத்துவதற்கு, பௌத்தபிக்குகளின்பாரிய அமைப்பொன்றை உருவாக்கப் போவதாக முருத்தொட்டுவே ஆனந்ததேரர் தெரிவித்துள்ளார். பொரளையில் இன்று நடைபெற்றதாய் நாட்டை பாதுகாக்கும் தேசிய சக்திகள் அமைப்பின் முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே பக்கம் 18



யாழ். குடாநாட்டில் நிலைமை மோசம் என்கிறது ஹெல உறுமய

பொலிஸாருக்குக் கூட பாதுகாப்பு இல்லையாம்

'யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமை இன்று மோசமடைந்துள்ளது. அங்கு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோரின் உயிருக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அவர்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிப்பது அரசின் பொறுப்பாகும். ஆனால், இதை அரசு பக்கம் 18

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க 13ஆவது மாநாடு யாழ்ப்பாணத்தில்!

சனியும், ஞாயிறும் கோலாகலமாக

உலகத் தமிழ்ப் பண்பாட்டுஇயக்கத்தின் 13 ஆவது சர்வதேச மாநாடு எதிர்வரும்சனி,ஞாயிறுக் கிழமைகளில் யாழ். நகரில் கோலாகலமாக நடைபெறுகின்றது. எதிர்வரும் சனிக்கிழமையாழ்ப்பாணம்பல்கலைக்கழகத்தின்கைலாசபதி அரங்கில் பொது அமர்வும், வெளியில் ஆய்வரங்களும் இடம்பெறும். அடுத்த நாள் இறுதிநாள் அமர்வு யாழப்பாணம் ரில்கோ விடுதியில் பக்கம் 18

காலைக்கதிர் Kalaikkathir

இந்தியாவிடம் வாங்கிய புதிய போர்க் கப்பலை எல்லையிலேயே நிறுத்துகிறது இலங்கை!

கொழும்பு, ஒக. 01

இந்தியாவிடம் இருந்து அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட புத்தம் புதிய போர்க்கப்பல், வெளிநாட்டவர்களின் ஊடுருவல் மற்றும் கடத்தல்களை முறியடிக்க பாக்கு நீரிணையில் நிறுத்தப்படும் என்று இலங்கைக் கடற்படை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு, கடந்த 22 ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்ட ஆழ்கடல் ரோந்துக் கப்பலுக்கு 'சயுரால' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. நாளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனை அதிகாரபூர்வமாக இயக்கி வைக்கவுள்ளார்.

இது குறித்து இலங்கை கடற்படைப் பேச்சாளர் லெப். கொமாண்டர் சமிந்த வலுகலகே தெரிவித்தவை வருமாறு:-

பாக்கு நீரிணையில் இது கடற்படைக்கு மேலும் பலத்தைக் கொடுத்துள்ளது. நாட்டின் கடல் எல்லைகளுக்குள் ஊடுருவும் வெளிநாட்டவர்கள் மற்றும் கடத்தல்காரர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இந்தக் கப்பல் ஈடுபடுத்தப்படவுள்ளது.

கடலிலும் தரையிலும் அதிகரித்துள்ள கடத்தல் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்காக, யாழ். குடாநாட்டில் இலங்கைக் கடற்படையினர் மற்றும் கடலோரக் காவல் படையினர் உயர் விழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், கடற்படையின் பாதுகாப்பு குறைக்கப்படவில்லை. உயர் மட்ட பாதுகாப்பு வடக்கு கிழக்கில் மாத்திரமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பாக்கு நீரிணை வழியாக இந்தியாவில் இருந்து போதைப் பொருள் கடத்தல்கள் அதிகரித்திருக்கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார் .

இந்தியாவின் 'நோயாளர் அம்புலன்ஸ் சேவை' இலங்கை முழுவதற்கும் விரிவாக்க முடிவு!

கொழும்பு, ஒக. 01

இந்திய அரசின் உதவியுடன் இரண்டு மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்ட அவசர நோயாளர் காவு வண்டி(அம்புலன்ஸ்) சேவையை, நாடு முழுவதிலும் விரிவாக்குவதற்கு இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

இந்திய அரசின் நிதி மற்றும் ஆலோசனை, பயிற்சி உதவிகளுடன், கடந்த ஆண்டு அவசர நோயாளர் காவு வண்டிச் சேவை, இலங்கையின் தென் மற்றும் மேல் மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

இரண்டாவது கட்டமாக இந்தச் சேவை நாடு முழுவதற்கும் விரிவாக்கப்படவுள்ளது என்று பிரதி அமைச்சர் ஹர்ஷடி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தச் சேவையை விரிவாக்குவதற்கு 300 நோயாளர் காவு வண்டிகளுடன், 2 ஆயிரம் பணியாளர்களும் தேவைப்படுகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதல் ஆண்டில் இந்தச் சேவைக்கு 3இலட்சத்து 22, ஆயிரம் அழைப்புகள்வந்தன என்றும், 32 ஆயிரத்துக்கும் அதிகமான அவசர உதவி தேவைப்படும் நோயாளர்களுக்கான உதவிகள் அளிக் கப்பட்டன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது, தென் மற்றும் மேல் மாகாணங்களில் இந்தியா வழங்கிய 88 நோயாளர்காவு வண்டிகளில், 550 பணியாளர்கள், 24 மணி நேரமும் இந்தச் சேவையை வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் இராணுவத் தளபதியுடன் சந்திப்பு

இலங்கைக்கான அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் பிரித்தானிய பிரதித் தூதுவர் ஆகியோர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இராணுவ தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கையில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேணல் டக்ளஸ் ஹேஷ், இராணுவத் தளபதி இடையில் முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், புதிதாக நியமிக்கப்பட்ட இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரித்தானிய பிரதி தூதுவர் டொம் பர்ன் மற்றும் அந்த தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் இலங்கை இராணுவ தளபதியை நேற்று முன்தினம் சந்தித்துள்ளன.

இந்தச் சந்திப்பின் போது இரு நாடுகளுக்கு இடையிலான முக்கிய விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், ஒக. 01

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பாட்டு:குமுதா உமாகாந்தன், வயலின்: ப.சியாமகிருஷ்ணா, மிருதங்கம்: க.நந்தகுமார், கடம்: அ.செல்வரெத்தினம்.

★★★

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று சைவப் புலவர் காசி ராஜா 'சைவசமய வாழ்வியல்' என்னும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார். (இ)

இணைந்தே செயற்படுகின்றன அரசாங்கமும் கூட்டு எதிர்க்கட்சியும்!

இரு தரப்பினரது நடிப்பில் ஏமாந்து போயுள்ளனர் மக்கள்!!

ஞானசார தேரர் கூறுகின்றார்

நல்லாட்சி அரசும், கூட்டு எதிர்க்கட்சியும் இணைந்தே செயற்பட்டு வருகின்றன என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் வண கலகொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாகம்புர துறைமுகத்தை சீனாவிற்கு விற்பனை செய்வதற்கு முன்னதாக கூட்டு எதிர்க்கட்சியின் தரப்பினர் ஊடக சந்திப்புக்களை நடத்தி தேசப்பற்றை வெளிப்படுத்தியிருந்தனர்.

எனினும் துறைமுகம் சீனாவிற்கு விற்பனை செய்யப்பட்ட போது அந்த தேசப்பற்றை கூட்டு எதிர்க் கட்சியின் ஒருவரிடமும் காண முடியவில்லை.

மெய்யாகவே இதற்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தால் பல்வேறு விடயங்களை செய்திருக்க முடியும்.

அவர்களால் முடியாததை இவர்களும் இவர்களால் முடியாததை அவர்களும் செய்யும் ஓர் அரசியல் சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஆளும்கட்சியினதும்கூட்டுஎதிர்க்கட்சியினதும் பிழைகளை ஒருவர் மாறி ஒருவர் மூடி மறைத்து வருகின்றனர்.

நாட்டின் சொத்துக்கள் விற்பனை செய்யப்படுகின்றன எனக் கூச்சலிட்டு மக்களை கூட்டு எதிர்க்கட்சி அணி திரட்டத் தவறியுள்ளது.

இந்த இரண்டு தரப்பினரதும் நடிப்பிற்கு நாட்டு மக்கள் ஏமாந்துள்ளனர். இதனால் நாட்டின் எதிர்கால தலைமுறையே பாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நல்ல செயல்களைச் செய்பவர்களுக்கு ஊடகங்களில் இடம் வழங்கப்படுவதில்லை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசனம்

கொழும்பு, ஓக.01

'நல்ல விடயங்களில் ஈடுபடுவோருக்காக அன்றி, வெற்று கோசமிடுபவர்களுக்கே இன்று சில ஊடகங்களில் இடம் வழங்கப்படுகின்றது. அதன் காரணமாக நாட்டில் சிலர் அரசாங்கம் தொடர்பில் தவறான புரிதலை ஏற்படுத்தியிருக்கின்றனர்'

இவ்வாறுதெரிவித்தார், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஹிங்குராக்கொட வலயக் கல்விஅலுவலகபுதியகட்டதிறப்பு விழா நேற்று இடம்பெற்றபோது, அதில்பிரதம அதிதியாகக்கலந்து கொண்டுஉரையாற்றும்போதே அவர்மேற்கண்டவாறுகூறினார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்துஉரையாற்றுகையில்,

தவறு செய்பவர்களுக்கு நாட்டில்இருப்பு இல்லை. பௌத்த புண்ணிய பூமியான இந்த நாட்டில் நியாயமான சமூகத்தை நோக்கிப்பயணிப்பவர்கள்மட்டுமே நிலைத்திருக்க முடியும். நாடாளுமன்ற தலைகளின் எண்ணிக்கையைமாற்றிஆட்சியைக்கைப் பற்றுவதற்கு எவர் கனவு கண்டாலும், அதற்கு எனது விருப்பத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்தில் 113 ஆசனங்களைப் பெற்றபின்னர் அரசாங்கமும், ஜனாதிபதியும் முடிவடைந்து விடுவார்களென எதிர்க்கட்சி உறுப்பினர்களும், முன்னாள் அமைச்சர்களும் தேசிய பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்திருக்கின்றனர்.

ஆனால், 113ஆசனங்களைப் பெற்றாலும் அரசியலமைப்புக்கமைய எவரும் எனது ஆசீர்வாதம்இன்றிபுதியஅரசாங்கத்தை அமைக்க முடியாது.

நாட்டின் முன்னேற்றத்துக்கான தடைகளை அகற்றி, தற்போதைய அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும்போது, வெற்று கோசமிடுவோர் நாட்டில்பல்வேறுகுழப்பநிலையை ஏற்படுத்துகின்றனர்.

ஊழல், மோசடி, வீண்விரயம் மற்றும் குடும்ப ஆதிக்கத்தை விதைத்து,அதிகாரத்தைத்தவறாக பயன்படுத்திய நாட்டின் பயணத்தை மாற்றி, நாட்டில் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை பாதுகாத்து சிறந்த நாட்டை உருவாக்குவதற்கு கிராமத்திலிருந்து வந்த தலைவர் என்ற வகையில் எனது தலைமையில் தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகளை பொறுத்துக்கொள்ள முடியாத சிலர் கோசமிட்டுக் கொண்டிருக்கின்றனர். – என்றார்.

மேற்படி நிகழ்வில் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேல ஜயரத்ன, மாகாண சுகாதார அமைச்சர் எம். ஹேரத் பண்டா, மாகாண அமைச்சர் சம்பத் ஸ்ரீ நிலந்த உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (மு)

நிலக்ஷனின் 10 ஆம் ஆண்டு அஞ்சலியும் நினைவுரையும்

யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரி பழைய மாணவரும் யாழ். பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சனின் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியின் சபா லிங்கம் அரங்கில் நடைபெற வுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத்தலைவர்கு.குருபரன்தலைமையில்நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ்.பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் அலகின் இணைப்பாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாநிதி சி.ரகுராம்'தற்காலச் சூழலில் தமிழ்ஊடகவியலாளர்கள் எதிர் நோக்கும் சவால்கள்' என்ற தலைப்பில் நினைவுப் பேருரை யாற்றுவார்.

சகாதேவன் நிலகூடன் கடந்த 2007 ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி கொக்குவிலில் உள்ள அவரது வீட்டில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (மு)

காலையில் வாங்கிய வாகனம் மதியம் விபத்தில் சிக்கியது

சாரதிக்கு கை முறிந்தது, கிளிநொச்சியில் சம்பவம்

காலையில் கைமாறிய மகேந்திரா வாகனம் ஒன்று மதியம் விபத்தில் சிக்கியதில் சாரதிக்கு கை முறிந்தது. கிளிநொச்சி திரேசா ஆலயத்திற்கு முன்பக்கமாக நேற்றுதிங்கட்கிழமை மதியம் இச்சம்பவம் இடம்பெற்றது. மேற்படி வாகனம் தனியார் பேருந்து ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. மகேந்திரா வாகனத்தைச் செலுத்திச் சென்ற சாரதி படுகாயமடைந்ததுடன், அதில் பயணித்த மேலும் மூவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

டிப்போ சந்தியில் இருந்து கரடிப்போக்கில் உள்ள கராஜ் ஒன்றுக்கு மிக வேகமாக சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம் பெற்றதாகக் கூறப்பட்டது. (மு)

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களை தாக்கியவர்களைக் கைதுசெய்ய உத்தரவு

கொழும்பு, ஓக.01

கொலன்னாவ இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு எதிரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கூட்டுத்தாபன ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாககைதுசெய்யுமாறு நீதிமன்றம் வெல்லம்பிட்டி பொலிஸாருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் ரங்க திஸாநாயக்க இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த போது அங்கு சென்ற வெளியார் சிலர் பொல்லுகளால் சில ஊழியர்களை தாக்கினர் எனக் கூறி மூன்று ஊழியர்கள் வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (மு)

தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரை யாற்றுகையிலேயே அவர் இவ் வாறு கூறினார்.

அங்கு அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இன்றைய அரசியல் நிலை தொடர்பாக பொது மக்களுக்கு பாரிய குழப்பங்களும்தெளிவற்ற நிலைகளும்உருவாகியிருக்கின்றமையை நாம் நன்றாக உணர்ந்திருக்கின்றோம். தமிழர்களின் கூட்டுஅரசியலில்பிரிவினைகள் உருவாகியுள்ளன, கருத்துமோதல்கள் நடைபெறுகின்றன என்று பல்வேறு செய்திகளை மிகைப்படுத்தியும்திரித்தும்பொதுசன ஊடகங்களும் – குறிப்பாக வடபகுதியில் இருந்து வெளிவரக்கூடிய சிலதமிழ்ப் பத்திரிகைகளும் – வெளியிட்டு வருகின்றமையை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

ஜக்கிய இலங்கைக்குள் கூடுதல் அதிகாரங்களுடனான வட, கிழக்கு பிராந்திய சுயாட்சிஉரிமையைக் கொண்ட ஓர் அரசியல் தீர்வைப்பெற்றுக் கொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட்டுக் கொண்டிருக்கும் இவ் வேளையில் இவ்வாறான அடிப்படை எதுவும் அற்ற, பிழையான செய்திகள் மக்களைக் குழப்பக் கூடும். கட்சிகளுக்கிடையே, தலைவர்களுக்கிடையே, அங்கத்தவர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள்உருவாவதுதவிர்க்க முடியாது. ஆனால் அவற்றைப் பேசித் தீர்க்க முடியும். வேறுபாடுகளை மிகைப்படுத்தி, பத்திரிகைகளை விற்க எத்தனிப்பது அந்தந்தப் பத்திரிகைகளின் சுய நலத்தையே பிரதிபலிக்கின்றது. பத்திரிகைச் செய்திகளை வாசிக்கும் போது இது சரியாக இருக்குமா என்ற இயற்கையான கேள்வியையும் உங்கள் மனதில் ஏற்றுவிட்டீர்களானால்உண்மையைக் காலாகாலத்தில்அறிந்துகொள்ள அதுவழிவகுக்கும்.

அண்மையில் கனடியத்தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் வெளியிட்ட உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் அங்குள்ள சட்டத்தரணிகளால்கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

பிரிவினை என்பது எம்மை பலவீனமாக்குவதுடன் மத்தியில் உள்ளவர்களுக்குஅவல்கிடைத்த கதையாக மாற்றிவிடும். எனவே தான்நான் பல கூட்டங்களில் இது பற்றி உரையாற்றுகின்றேன். கூட்டமைப்பு என்ற எமது அரசியல் பலம் மழுங்கடிக்கப்படக் கூடாது. ஆனால் அதேசமயம் அதன் மூத்த தலைவர்களின் வழிகாட்டல் தமிழ் மக்களின் பாரம்பரிய எதிர்பார்ப்புக்களுக்கு அமைவாக எம்மை நெறிப்படுத்துவதாக அமைய வேண்டும். அப்போதுதான் எமது ஒன்றுபட்ட கோரிக்கைகள் மத்திய அரசினாலும் சர்வதேச அரசியல் அரங்கினாலும் உற்று நோக்கப்படும் என்றஅரசியல்சார்ந்தஎன்கருத்தை குறிப் பிட விரும்புகிறேன்.

– இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ)

முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிடம்தெரிவித்தார்பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர.

கோப்பாய் பொலிஸார் இருவர் மீது நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வாள் வெட்டுத் தாக்குதலை அடுத்து பொலிஸ்மா அதிபர்நேற்றுயாழ்ப்பாணத்தில் திடீர் விஜயம் ஒன்றை மேற் கொண்டார்.

யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்று காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள்களைபொலிஸ்மா அதிபர் பார்வையிட்டார்.

பின்னர் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளர்களை அவர் சந்தித்தார். அப்போது அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஷான் பெர்ணான்டோவின் கட்டுப்பாட்டில், யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் பாலித்தபெர்ணாண்டோ, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஸ்ரெனிஸ்லெஸ் ஆகியோரின் மேற்பார்வையில் 6 பொலிஸ் குழுக்கள்விசாரணைகளைமுன்னெடுத்துள்ளன.

அந்தபொலிஸ்குழுக்களின் ஆரம்பக் கட்ட விசாரணைகளிலேயே பல்வேறு விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட 7 பேர்அடையாளம்காணப்பட்டுள்ளனர். மேலும் 8 பேர் தொடர்பிலானதகவல்களைவெளிப்படுத்திக் கொள்ளவும் அடையாளம் காணப்பட்டோரைக்கைதுசெய்யவும் மேலதிக நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

வாள்களுடன் தாக்குதல் நடத்த வந்தவர்கள் ஒவ்வொரு மோட்டார் சைக்கிள்களிலும் 2 அல்லது மூன்று பேர் இருந்துள்ளமைசாட்சிகள்ஊடாகத்தெரிய வந்துள்ளது. அதன்படிகுறைந்த பட்சம் 15 பேர் கொண்ட குழு இந்ததாக்குதல்களுடன்தொடர்புபட்டுள்ளது. சூத்திரதாரிகள் அனைவரையும் சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவர விசேட திட்டம் ஒன்றை வகுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த விடயத்தை அல்லது இது போன்ற வன்முறைச் சம்பவங்கள்பற்றியதகவல்கள், துப்புகள் இருந்தால் பொதுமக்கள் அது குறித்து என்னுடைய (பொலிஸ்மாஅதிபரின்)தொலைபேசிக்கு 0717582222 இலக்கத்துக்கு அல்லது எனது உதவியாளரின் 0718592020 இலக்கத்துக்கு வடமாகாண சிரேஷ்ட டி.ஐ.ஜி. ரொஷான் பெர்னாண்டோவின் 0718591028 இலக்கத்துக்கு அல்லது யாழ். டி.ஐ.ஜி. பாலித பெர்னாண்டோவின் 0718592613 என்ற இலக்கத்துக்குதகவல்தரலாம். – என்றார் பொலிஸ்மா அதிபர். (உ)

ஸ்ரீலங்கன்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதியை அங்கிருந்து அகற்றியதோடு, பயணிகள் இருக்கும் இடத்தில் இருந்து அதனைவெளியேற்றுவதற்காக விரைவாக எடுத்துச் சென்றுள்ளனர். அந்த நேரத்தில் அது மீண்டும் வேகமாக புகைகக்கத் தொடங்கியது.

இதையடுத்து தீப்பிடித்த பையை ஒரு நீர்க் கொள்கலனுக்குள் அமிழ்த்தி தீயைக் கட்டுப்பாட்டில்கொண்டுவந்தனர். விசாரணையின் போது, ஒரு லித்தியம் பேட்டரி பை மற்றும் இரண்டு கையடக்க தொலைபேசிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தச்சம்பவத்தினால்விமானத்தில் பயணித்த பயணிகள் பெரிதும் கிலேசமடைந்திருந்தனர்.

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

சம்பந்தன் முன்மொழியும் தீர்வு

"மாகாணங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை மத்திய அரசு மீளப் பெறவோ, தான் பிரயோகிக்கவோ முடியாத ஒரு நிலைமை உறுதிப்படுத்தப்படுமாக இருந்தால், அது பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள இறைமையின் அடிப்படையில், மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுவதாக அமையும். அத்தகையதீர்வு ஒன்றையேநாம் இப்போது பரிசீலித்து, ஆராய்ந்து முன்னெடுத்து வருகின்றோம்." - இவ்வாறு தற்போதைய தீர்வு முயற்சிகள் குறித்து நேற்று முன்தினம் மட்டக்களப்பில் வைத்து விளக்க மளித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

இப்போதைய தீர்வு முயற்சிகள் தொடர்பில் மூடுமந்திரமாக இருந்து வந்த சில விடயங்கள் - அம்சங்கள் - இந்த உரையின் மூலம் வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளன எனக் கருதலாம்.

எனினும், இந்த உரை ஒரு பெரும் கருத்துருவ சர்ச்சைக்கு வழிகோலும் என எதிர்பார்ப்பதிலும் தவறு இருக்காது.

'பகிரப்பட்ட இறைமை' என்ற சொல்லாடல் ஏற்கனவே பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருப்பது நமக்குத் தெரிந்ததே.

சாதாரண பொது மக்களுக்கு விளங்காத அபத்தமான அநாமதேய சொற்றொடர்கள், சொல்லாடல்களை வைத்துக்கொண்டு இனி அரசியல் தலைவர்கள் மத்தியில் சர்ச்சைகள் வெடிக்கும். அவற்றின் ஆழத்தையும் அர்த்த பரிமாணத்தையும் புரிந்து கொள்ள முடியாமல் பொதுமக்கள் பரிதவிப்பார்கள். அவர்களது தலைவெடிக்கும். இதுதான் நடக்கப்போகின்றது.

"தனித்துவமான ஒரு மொழி, தனித்துவமான பண்பாட்டுக் கோலங்கள், செம்மையான வரலாற்று வேரோட்டங்கள், நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு தாயக நிலம், இன அடையாள உணர்வு ஆகிய பண்புகளைக் கொண்ட ஒரு தனித்துவமான மக்கள் சமூகமாக உள்ளமையால், இலங்கைத் தமிழர் தேசம் இறைமையுள்ள, சுயநிர்ணய உரிமைக்கு உரித்தான ஒரு கட்டமைப்பாகும்."

1951 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து, 2009 இல் முடிவுக்குக் கொண்டு வரும் வரை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு வரையும் -

அதற்குப் பிறகு, வடக்கு மாகாண சபைத் தேர்தல் வரையும், அதன் பின்னரும் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மற்றும் பிரதான தமிழ் அரசியல் கட்சிகளும் - கூறிவந்தது இதைத்தான்.

தமிழர் தேசத்தின் இறைமையை - சுயநிர்ணய உரிமையை - அங்கீகரிப்பதான தீர்வு குறித்தே சமஷ்டிக் கட்சியிலிருந்து சகல தரப்புகளும் வலியுறுத்தி வந்திருக்கின்றன.

சம்பந்தனின் தற்போதைய விளக்கம் அதற்குள் உள்ளடங்குகின்றதா என்பதுதான் இனிக் கேள்வியாக எழப்போகின்றது.

இது குறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஏற்கனவே தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

"தமிழ்த் தேசத்துக்கு உரிய இறைமை அந்தத் தேசத்தின் தமிழ் மக்களிடமே இருக்கும். அதைப் பகிர முடியாது. 'பகிரப்பட்ட இறைமை' என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவேயில்லை. எமது தேசத்துக்குரிய இறைமையை நாமாக விரும்பிக் கைவிட்டு, வேறு யாரிடமிருந்து இறைமையைப் பகிர்ந்துகொண்டு தான் எமது இறைமையை நிலை நாட்டலாம், சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கலாம் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

"நாங்கள் ஒரு தேசம் என்ற வகையில் எமது இறைமை எங்களிடம்தான் இருக்கின்றது. அதை நாங்கள் இன்னொரு வரிடமிருந்து பெற்றுக் கொள்ளத் தேவையில்லை. ஒரு தேசமாக இருக்கும் மக்களிடமே அவர்களின் இறைமையும் இருக்கும். அவர்கள் அதை நேரடியாகப் பிரயோகிக்க முடியுமே தவிர யாருக்கும் தாரை வார்க்க - பகிர - முடியாது." - என்று ஏற்கனவே கூறியிருந்தார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இது விடயம் - குறித்து புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கமும் சில கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்.

"சமஷ்டி ஆட்சிமுறை பற்றி சிங்கள அரசியல்வாதிகள் மிகவும் குளறுபடியான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றார்கள். இறையாண்மை அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்குப் பதிலாக, அதிகாரப் பரவலாக்கம் பற்றியே அவர்கள் சிந்திக்கின்றார்கள்." - என்று அன்ரன் பாலசிங்கம் கனேடிய அரசமைப்பு நிபுணர்களுடனான ஓர் உரையாடலில் குறிப்பிடுகின்றார்.

'இறையாண்மைப் பகிர்வு' குறித்து பாலசிங்கமும் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், அதை 'அதிகாரப் பரவலாக்கத்துடன்' போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது என்பதே அவரின் நிலைப்பாடு. இப்போது சம்பந்தர் கூறுகின்றமை இறையாண்மைப் பகிர்வா? அல்லது அதிகாரப் பரவலாக்கமா? - சிந்திக்கப்பட வேண்டிய விடயம் இதுதான்.

"ஒரு கேள்விக்கு உட்படுத்த முடியாத ஒரு தேசமாக எழுச்சி பெற்றுள்ள தமிழ் மக்கள், சிங்கள தேசத்துடன் சேர்ந்து இந்தத் தீவில் சமஷ்டி முறையிலான கூட்டாட்சி ஒன்றில் இணைவதற்கு விரும்புகின்றார்கள்." - 1951 இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிதாமகர் தந்தை செல்வநாயகம் கட்சி மாநாட்டில் இப்படித்தான் அறிவித்தார்.

சமஷ்டி, சுயாட்சி, கூட்டாட்சி, இணைப்பாட்சி, அதிகாரப் பகிர்வு, அதிகாரப் பரவலாக்கம் என்ற சொல்லாடல்களுக்கு மத்தியில், சம்பந்தன் முன்வைத்துள்ள திட்டம் எவ்வாறு நமது ஆய்வாளர்களால் பிய்த்து உதறப்படப் போகின்றதோ தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போமே...

பிணைமுறி மோசடியை மூடி மறைப்பதற்கு தாஜுதீன் விசாரணைகள் மீள ஆரம்பம்!

நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, ஒக. 01

மத்திய வங்கி பிணை முறி மோசடிகளை மூடி மறைக்கும் நோக்கில், ரகர் வீரர் வசீம் தாஜுதீன் மரணம் பற்றிய விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

களனி பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மத்திய வங்கி பிணை முறியின் ஊடாக 13 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் மேல் மோசடி செய்தவர்கள் அதனை 16 கோடி ரூபா கொண்டு மூடி மறைக்க முயற்சிக்கின்றனர்.

மத்திய வங்கி பிணை முறி மோசடியால் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்திக் கொண்ட இந்த அரசு, வாகன விபத்தில் உயிரிழந்த தாஜுதீனின் மரணம் பற்றிய விசாரணைகளை மீள ஆரம்பித்துள்ளது.

நாட்டை மீளவும் கட்டியெழுப்பத் தேவையான புதிய அரசியல் பின்னணி உருவாகியுள்ளது.

வாகனவிபத்தில் உயிரிழந்த தாஜுதீனின் மரணம் தொடர்பில் என் தாயையும் தொடர்புபடுத்தினார்கள், என்னையும் எனது நாயையும் கூட இந்த வழக்கில் தொடர்புபடுத்தியுள்ளனர்.

மாணவர் போராட்டங்களை அடக்குவதில் இந்த அரசு கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் பாடசாலை மாணவர்கள் வறட்சி காரணமாகப் பாதிப்பு!

மடு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார் மடு வலயப் பாடசாலைகளில் 6 ஆயிரத்து 200 மாணவர்கள் வறட்சி காரணமாக பாதிக்கப்பட் டுள்ளனர். மேலும் அதிக வெப்பம் காரணமாக மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளில் அவதானம் செலுத்த முடியாது உள்ளனர் என மடு வலயக் கல்விப் பணிப்பாளர் லூட்ஸ் மாலினி வெனிற்ரன் தெரிவித் துள்ளார்.

தற்போது வடமாகாணங் களில் நிலவி வரும் கடும் வறட்சி காரணமாக விவசாயத் துறை, கால்நடை வளர்ப்பு, மக்களின் வாழ்வாதாரம் மற்றும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் போன்றன பாதிக் கப்பட்டுள்ள நிலையில் விவ சாயிகளும் பண்ணையாளர் களும் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

இந்த நிலையில் பாடசாலை களிலும் வறட்சி காரணமாக குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதன்காரணமாக பாட சாலை மாணவர்களும் சிரமப் படுகின்றனர் என மடு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மன்னார் மடு வலயத்தில் உள்ள 52 பாடசாலைகளில் 20 பாடசாலைகளில் குடி தண்ணீர் நெருக்கடி காணப்படு கின்றது.

தேவன்பிட்டி, மூன்றாம்பிட்டி, பாலம்பிட்டி, தட்சணாமருமடு, கட்டை அடம்பன் ஆகிய பாடசாலைகள் இதில் அடங்குகின்றன. பிரதேச சபைகள் பாடசாலைகளுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டுள்ளன.

குடிதண்ணீர் விநியோகம் இடம் பெறாத பாடசாலைகளில் குடிதண்ணீரை மாணவர்கள் வீட்டில் இருந்தே கொண்டு வருமாறு பாடசாலை அதிபர்கள் அறிவித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான துருக்கி தூதுவர் இராணுவத் தளபதியுடன் சந்திப்பு!

கொழும்பு, ஒக. 01

இலங்கைக்கான துருக்கி தூதுவர் துஞ்ச ஒஸ்சுகாதார் மற்றும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது இலங்கைக்கான துருக்கி தூதுவர் புதிய இராணுவத் தளபதிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

பின்னர் இருநாடுகளுக்கு மிடையிலான நட்புறவை மேம்படுத்துவதற்கான முக்கியமான விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது இராணுவத் தளபதியால் துருக்கி தூதுவருக்கு நினைவுப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் துருக்கி தூதரகத்தின் பிரதிச் செயலாளர் திருமதி நசான் டென்சி கலந்துகொண்டார்.

ஆரோக்கிய உணவுகளுக்கு முன்னுரிமை கொடுப்போம்

சிறுவர்களுக்கு இனிப்புணவுகளை அறிமுகப்படுத்துவதை பிற்போடுவோம். ஆரோக்கிய உணவுகள் உண்பதை ஊக்கப்படுத்தி முன்னுரிமைப் படுத்துவோம்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

நாளை
02.08.2017
புதன்கிழமை
நட்சத்திரம் : அனுசம் மா. 5.45 வரை
திதி : தசமி பி.ப 4.10 வரை
சுபநேரம் : 4.33 – 6.03 வரை
இராகுகாலம் : 12.03 – 1.33 வரை

வடக்கும் கிழக்கும் இணைவதற்கு புதிய அரசமைப்பு இடமளியாது!

பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 01

மாவட்டத்துக்கு மாவட்டம் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபாடுகளைக் காட்டாத வகையில் புதிய அரசமைப்பு அமையவிருப்பதால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் விசேட சலுகைகளை வழங்கும் வகையில் ஏனைய மாகாணங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் வகையில் அந்த மாகாணங்கள் இணைக்கப்படமாட்டாது எனப் பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

அத்துடன், எந்தவொரு மாகாணமும் இணைக்கப்படாத புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய அரசமைப்பு ஒற்றையாட்சி என்ற எல்லைக்குள் இருந்து கொண்டுதான் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வை முன்வைக்கும். மாவட்டத்துக்கு மாவட்டம் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபாடுகளைக் காட்டாத வகையில் தான் புதிய அரசமைப்பு அமையும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் விசேட சலுகைகளை வழங்கும் வகையில் ஏனைய மாகாணங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் வகையில் அந்த மாகாணங்கள் இணைக்கப்படமாட்டா.

எந்தவொரு மாகாணமும் இணைக்கப்படாத புதிய அரசமைப்பே உருவாக்கப்படும். நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்பது மைத்திரியால் எந்தவித நிபந்தனைகளுமின்றி வழங்கப்பட்ட வாக்குறுதியாகும்.

அவர் அந்தநிலைப்பாட்டில் தொடர்ந்து இருக்கின்றார். நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவதாக இருந்தால் சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்தியே ஆகவேண்டும்.

19 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணத்துக்கு அமைச்சர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றால் ஜனாதிபதியால் மாத்திரம் முடியாது.

ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்தே நியமிக்க வேண்டும். இவ்வாறு பல உள்ளன. இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை புதிய அரசமைப்பின் ஊடாக முற்றாக நீக்கப்படும்.

19ஆவது திருத்தச் சட்டத்தை ஆய்வுசெய்து பார்த்தால் இன்னும் ஓரிரு வருடங்களில் ஜனாதிபதி முறைமை இல்லாமல் போவதற்கான ஏற்பாடு இருப்பதைக் காணலாம்.

அரசமைப்பைத் திருத்தித் திருத்தி இருப்பதில் அர்த்தமில்லை. அதை இனியும் ஒட்டுப்போட்டுப் பாவிக்க முடியாது. காலத்துக்கேற்ப புதிய அரசமைப்பு கொண்டு வருவதுதான் பொருத்தமானதாகும். ஆகவே, புதிய அரசமைப்பு தான் வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

டுபாயில் இலங்கையர் மீது திருட்டுக் குற்றச்சாட்டு!

டுபாயில் உள்ள ஒரு பாதுகாப்பு நிறுவனத்தில் பணியாற்றும் ஆறு இலங்கை பாதுகாப்பாளர்கள் மீது திருட்டுக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்தில் ஈடுபட்ட வாகனத்தில் இருந்து அவர்கள் 1,198,000 டினார் திருடியுள்ளார்கள் என்று அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆறு இலங்கையர்களும் டுபாயில் உள்ள ஒரு கடையின் பல கிளைகளுக்குச் சொந்தமான பணத்தைத் திருடியுள்ளனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

(க)

நாடாளுமன்றத்தை அவமதிக்கும் செயற்பாடு; மஹிந்த அணிக்கு எதிராகக் கடும் நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 01

அதி உயர் சபையாகக் கருதப்படும் நாடாளுமன்றத்தை அவமதிக்கும் வகையில் செயற்பட்ட மஹிந்த அணியான கூட்டு எதிரணி உறுப்பினர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதன்படி, கூட்டு எதிரணி உறுப்பினர்களுக்கு அதியுச்ச தண்டனையை வழங்குமாறு கோரி ஐ.தே.கட்சி எம்.பிக்கள் சபாநாயகருக்குக் கடிதம் அனுப்பவுள்ளனர்.

எரிபொருள் விநியோகத்தை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் மீது கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது கடும் அமளிதுமளி ஏற்பட்டது. இதையடுத்து சபை நடவடிக்கைகள் எதிர்வரும் 4ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டன.

அதன்பின்னர் 'கோரம்' மணியை ஒலிக்கச்செய்து நாடாளுமன்றத்தைக் கூட்டியகூட்டுஎதிரணியினர் சபாநாயகர் ஒருவரையும் நியமித்தனர். அதன் பின்னர் இரண்டு எம்.பிக்கள் உரையாற்றினர். இந்தச் சந்தர்ப்பத்தில் பிரசன்ன ரணதுங்க எம்.பி. ஜனாதிபதி ஆசனத்திலும் அமர்ந்தார்.

ஜனாதிபதியின் கதிரையில் எந்தவோர் எம்.பியும் அமர்வதில்லை. அமரவும் முடியாது ஜனாதிபதி சபைக்கு வராவிட்டாலும் அவருக் காகவே அந்தக் கதிரை ஒதுக்கப்பட்டிருக்கும்.

அத்துடன், சபாநாயகர் கதிரையையும், சபாபீடத்தையும் எவரும் அணுகக் கூடாது. இந்த விடயம் பற்றி அரசமைப்பிலும், நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளிலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவேதான், சபையை அவமதித்த கூட்டு எதிரணியினருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஐ.தே.கட்சி எம்.பிக்களால் சபாநாயகரிடம் கோரப்படவுள்ளது.

இலங்கையில் சத்திரசிகிச்சை; இந்தியர்களுக்குத் தடை!

கொழும்பு, ஓக.01

சிறுநீரக மோசடி காரணமாக இந்தியர்களுக்கு இலங்கையில் சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது .

இருப்பினும் மாலைதீவிற்கு இது ஏற்புடையதல்ல என்று சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மாலைதீவு சுகாதார அமைச்சர் அப்துல் ஹபீம் இப்ராகிம்மை நேற்று முன்தினம் அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போதே இந்த விடயத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜப்பான் மாணவர்கள் தம்புள்ளைக்கு விஜயம்!

தம்புள்ள மத்திய மகா வித்தியாலயத்திற்கு ஜப்பான் பாடசாலை மாணவர்கள் சிலர் விஜயம் செய்துள்ளனர்.

கல்வி அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜப்பான் மாணவர்களுக்கான இந்த விஜயத்தின் போது, யப்பான் பாடசாலை குழுவினர் இலங்கையில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்வோம் என உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

இந்த மாணவர்களை வித்தியாலய மாணவர்கள் ஆசிரியர்கள் வரவேற்றுள்ளனர்.

எழுச்சிக் கிராமத் திட்டத்தில் வடக்கின் 49 கிராமங்கள்!

எழுச்சிக் கிராமம் (உதாகம) வேலைத் திட்டத்திற்காக இந்த வருடத்தில் அரசால் 613 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் மாத்திரம் 49 கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்காக 126 கோடியே 70 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் எல். எஸ்.பலன் சூரிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இரண்டாயிரத்து 534 குடும்பங்கள் இதன்மூலம் நன்மை அடையவுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை ஆயிரமாகும். வடக்கு மாகாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படும் வீடுகளுக்காக குடும்பம் ஒன்றுக்கு ஐந்து லட்சம் ரூபா கடன் வழங்கப்படவுள்ளது.

யுத்தத்தை எதிர்கொண்ட குடும்பங்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, வவுனியா போகஸ் வேவ ஆகிய பகுதிகளில் ஆயிரத்து 740 குடும்பங்களுக்கு வீடுகளை வழங்குவதற்கான திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக இங்கு ஒன்பது எழுச்சிக் கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் 50 சதவீதமான பணிகள் நிறைவடைந்துள்ளன.

அரசின் எழுச்சிக் கிராமம் வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு வெற்றி கொள்ளப்பட்டுள்ளது என்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருடத்தில் மாத்திரம் 284 எழுச்சி கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன. இதில் 156 கிராமங்களின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் உத்தேச நிர்மாணத்திற்காக சுமார் 614 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய எழுச்சி கிராமங்களின் நிர்மாணப் பணிகள் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க)

கல்முனைத் தொகுதிக்கு அரசியல் அதிகாரம்: பிரதமரைக் கோரும் தீர்மானம் நிறைவேற்றம்!

கல்முனை, ஓக.01

கல்முனைத் தொகுதிக்கு ஐக்கிய தேசிய கட்சியால் அரசியல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனப் பிரதமரணில் விக்கிரமசிங்கவைக் கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கான விசேட கலந்துரையாடல் அந்தக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாஸிம், இணைப்புச் செயலாளர் ஏ.ஆர்.எம்.றிஸ்வி சுபைர் முன்னிலையில் கல்முனைத் தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ்.ஏ.றஸ்ஸாக் தலைமையில் சாய்ந்தமருது இளைஞர் நிலைய கேட்போர் கூடத்தில்

ஐ.தே.கவின் செயற்பாடுகளை விஸ்தரிக்கவும் முடிவு

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின்போது தற்போது ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் இருக்கின்ற போதிலும் அம்பாறை மாவட்டத்தில் காலங்காலமாக அந்தக் கட்சியின் ஆதரவாளர்களாக இருக்கின்ற அங்கத்தவர்களுக்கு எந்தவித அனுகூலங்களும் கிடைக்கவில்லை.

அவர்கள் ஏனைய கட்சிக் காரர்களால் புறந்தள்ளப்படுகின்றனர் எனவும், தொழில் வாய்ப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளில் புறக்கணிக்கப்படுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதில் கலந்துகொண்ட கட்சி ஆதரவாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்-

இந்தப் பகுதி ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கட்சியின் தலைமைப் பீடத்தால் இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுகின்றனர். தேர்தல் வந்தால் மட்டும் அவர்கள் இங்கு வந்து வாக்குகளைக் கேட்கின்றனர். பின்னர் அவர்கள் ஊடாக எதையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் உள்ளது.

முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.மன்சூர், முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா ஆகியோரின் காலத்தில் கல்முனை தொகுதியில் கட்சி பலப்பட்டிருந்தது.

அதேபோன்று, மீண்டும் கட்சி கட்டியெழுப்பப்பட்ட வேண்டும். அதற்கு அரசியல் அந்தஸ்து, அதிகாரம் என்பன வழங்கப்படவேண்டும். இதற்கான ஒத்துழைப்பையும் பரிந்துரையையும் கட்சியின் செயலாளர் கபீர் ஹாசிம் கொடுக்க வேண்டும்.- என வலியுறுத்தினர். (ச)

யுவதி மீது துஷ்பிரயோக முயற்சி: வட்டுவானில் ஒருவர் சிக்கினார்!

மட்டக்களப்பு வட்டுவான் பிரதேசத்தில் யுவதி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சித்த குற்றச்சாட்டில், சந்தேகத்தின் பேரில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிலுள்ள வட்டுவான் பிரதேசத்தில் 17 வயது யுவதி ஒருவர் வீட்டில் தனியாக இருந்துள்ளார். இந்த நிலையில், அவரது தந்தையை அழைக்கும் சத்தம் கேட்டு வீட்டுக்கு வெளியில் சென்ற யுவதி, தந்தை வீட்டில் இல்லை எனத் தகவல் தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப நபர் அந்த யுவதியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்துள்ளார். இதன்போது, மேற்படி யுவதி கூச்சலிட்டமையை அடுத்து, அந்த நபர் தப்பி ஓடியுள்ளார்.

இதனை அடுத்து, அந்த யுவதி பெற்றோரின் துணையுடன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த நிலையிலேயே அதே பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரைப் பொலிஸார் கைது செய்தனர். (ச)

தனியார் பல்கலைக் கழகத்தை உருவாக்குவதே எமது இலக்கு!

அகில இலங்கை மக்கள் காங். பிரதித் தலைவர் தெரிவிப்பு

அம்பாறை மாவட்டத்தில் தனியார் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதே எமது இலக்காகும்.

-இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதித் தலைவரும் அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவருமான ஏ.எம். ஜெமீல் தெரிவித்தார்.

ஒலுவில் பிரதேசத்தில் 129 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தென்கிழக்குப் பல்கலைக் கழகம் அமையப் பெற்றமையைத் தொடர்ந்து, அந்தப் பிராந்தியம் கல்வித்துறையில் வளர்ச்சி அடைந்தது. அதேபோன்று தனியார் பல்கலைக்கழகம் ஒன்றையும் நிறுவ வேண்டும். அதன்மூலம் இந்தப் பிராந்தியத்தில் சிறந்த கல்வியியலாளர்களை உருவாக்க வேண்டும்.

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி கல்வியைக் கொண்டே அளவீடு செய்யப்படுகின்றது.

அதன் அடிப்படையில், இந்தப் பிராந்தியத்தில் கல்வி கற்ற சமூகத்தை உருவாக்குவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். -என்றார். (ச)

தேசிய நல்லிணக்கத்துக்கான நிகழ்ச்சி நேற்று திருகோணமலை மாவட்டத்தில்!

திருகோணமலை, ஓக.01

தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய நல்லிணக்கத்துக்கான நிகழ்ச்சித்திட்டம் நேற்று திங்கட்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் என்.ஏ.ஏ. புஸ்பகுமார தலைமையில் நடைபெற்றது.

இலங்கையின் சமய பாடசாலைக் கல்வி முறையில் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்தை நிறுவனமயப்படுத்தல், இன, மத மற்றும் பிரதேசம், மொழி போன்ற பல்வகைத் தன்மைக்கு மதிப்பளித்து இலங்கையர் அனைவரும் ஒன்று படும் நோக்கில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், கிழக்கு மாகாண ஆளுநர்

ரோஹித போகொல்லாகம, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட், நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்துல்லாஹ் மஹ்ரூப், எம்.எஸ்.தௌபீக், எஸ்.துரைரெட்ணசிங்கம், கிழக்கு மாகாண காணி அமைச்சர் ஆரியவத்தி கலப்பத்தி, மாகாண சபை உறுப்பினர் ஜே.எம்.லாஹீர் மற்றும் மதகுருமார்கள் அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி திருமலையில் விவசாயி காயம்!

திருகோணமலை வான்எல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி, விவசாயி ஒருவர் எரிகாயங்களுடன் கந்தளாய் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கந்தளாய், வான்எல பகுதியைச் சேர்ந்த கருணாரத்ன மெட்டீஸ் (வயது- 51) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

இவர் சைக்கிளில் மண்வெட்டியை கட்டிக் கொண்டு வயலுக்குச் செல்லும்போதே மின்னல் தாக்கத்துக்கு இலக்காகினார் எனப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (ச)

கடலில் மூழ்கியவர்களை காப்பற்றினர் படையினர்!

திருகோணமலை, நிலாவெளி கோபாலபுரம் கடல் பகுதியில் நீராடிக் கொண்டிருந்த இளைஞர்கள் இருவர் திடீரென நீரில் மூழ்கினர்.

இதன்போது, பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்படை அதிகாரிகள் அவர்களைப் பாதுகாப்பாக மீட்டனர்.

கல்முனைப் பகுதியைச் சேர்ந்த 24 வயதான இருவரே இவ்வாறு காப்பாற்றப்பட்டவர்கள் ஆவர். (ச)

வேண்டாம் அரிசி இறக்குமதி! விவசாயிகள் சம்மேளனம் எதிர்ப்பு!!

கொழும்பு, ஓக. 01

அடுத்தவருடஆரம்பம் வரை உள்நாட்டுத் தேவைக்கான போதியளவு அரிசி கையிருப்பில் உள்ளது. அதனால், அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமே கிடையாது என அகில இலங்கை விவசாயிகள்சம்மேளனம்தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில்இச்சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன தெரிவித்தவை வருமாறு:-

அனுராதபுரம், பொலன்னறுவைமற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நெல்அறுவடைக்குத் தயாராகவுள்ளது.அத்துடன், கவுதுல பிரதேசத்தில்18ஆயிரம் ஏக்கரிலும் பொலன்னறுவையில் ஒன்றரை லட்சம் ஏக்கரிலும் அறுவடைகள் நடக்கவுள்ளன.

இந்த அறுவடைகள் முடிந்ததும் நாட்டில்கிட்டத்தட்ட 2 கோடி 60 லட்சம் மெற்றிக்தொன்அரிசி கையிருப்பில் இருக்கும். இந்நிலையில், அரசுஅரிசியை இறக்குமதி செய்தால்உள்நாட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவர்.

இந்தக் கையிருப்பின்படி ஒருகிலோ அரிசியின் மொத்த விலையை 64 ரூபாவாகவும் சில்லறை விலையை 68 ரூபாவாகவும்நிர்ணயிக்கமுடியும்.

எனவே,இந்தநிலையில்அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய அவசியமே கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். படைகளின் தலைமையகத்துக்கு இராணுவத் தளபதி இறுக்கமான உத்தரவு

ஆலோசனையின்றி சட்டம் ஒழுங்கில் தலையிடாதீர்கள்!

கொழும்பு, ஓக 01

யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு நிலைவரங்களைஆராய்ந்தஇலங்கை இராணுவத்தளபதிலெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, எந்தவொரு சூழ்நிலையிலும் இராணுவத் தலைமையகத்தின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளாமல், சட்டம் ஒழுங்கு விவகாரத்தில் தலையீடு செய்யக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளார்.

இலங்கையின் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் முதல் முறையாக லெப். ஜெனரல் மகேஸ் சேன நாயக்க கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

கடந்த சனிக்கிழமை காலையில் அவர் பலாலிப் படைத் தளத்தில் மூத்த படை அதிகாரிகளுடனும், படையினருடனும் கலந்துரையாடியுள்ளார். இதன்போது அவர், யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைவரங்கள் குறித்து இராணுவ அதிகாரிகளிடம் கேட்டறிந்துள்ளார்.

குறிப்பாக, யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற சில துப்பாக்கிச் சூடுகள் மற்றும் வாள்வெட்டு, தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாகவும், அதனை ஒட்டி எழுந்துள்ள நிலைமைகள் குறித்தும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

யாழ். குடாநாட்டுக்கு வந்த இராணுவத்தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க நேற்று முன்தினம் பிற்பகல் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். அதிகாரபூர்மற்ற வகையில் - நட்புரீதியாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது காணிகள் விடுவிப்பு குறித்து ஆராயப்பட்டது என்றும், கேப்பாப்பிலவு காணிகள் விடுவிப்பு விடயத்தில் விரைவில் சாதகமான முடிவு எடுக்கப்படும் என்று இராணுவத்தளபதி கூறினார் என வடமாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, எடுக்கப்படவேண்டிய முக்கியமான நடவடிக்கைகள் தொடர்பாகவும் இராணுவத் தளபதி உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

எந்தவொரு சூழ்நிலையிலும் இராணுவத்தலைமையகத்தின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளாமல், சட்டம் ஒழுங்கு விவகாரங்களில் தலையீடு செய்யக் கூடாது என்றும் யாழ்ப்பாண படைகளின்தலைமையகத்துக்கு, இராணுவத் தளபதி இறுக்கமாக உத்தரவிட்டுள்ளார்என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. (க)

கோயில் உடைத்து பிள்ளையார் சிலை திருட்டு!

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை பெரிய மல்லிகைப்பூ தோட்டத்தின் வழிப்பிள்ளையார் ஆலயத்தில் இரும்பு கம்பியால் பொருத்தப்பட்டிருந்த கதவு உடைக்கப்பட்டு உள்ளே இருந்த பிள்ளையார் சிலையை இனந்தெரியாதவர்கள் திருடிச்சென்றுள்ளனர்எனபொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் என விசாரணைகளை மேற்கொள்ளும்தலவாக்கலை பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

இந்த ஆலயத்தில் இதுபோன்ற திருட்டுச் சம்பவம் இதற்குமுன்னர் இரு தடவைகள் இடம் பெற்றுள்ளன என்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

சீன – இலங்கை உறவுகளால் இந்திய நிபுணர்கள் அச்சம்!

இந்திய ஊடகம் தகவல்

கொழும்பு, ஓக. 01

வளர்ந்து வரும் இலங்கை - சீன உறவுகள் குறித்து இந்திய நிபுணர்கள் அச்சம் கொண்டுள்ளனர் என்று இந்திய ஊடகம் ஒன்றில் வெளியாகியுள்ள கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 70 வீத உரிமையை 99 ஆண்டுகளுக்கு இலங்கை அரசு சீனாவுக்கு வழங்கியுள்ளமை குறித்து, தேவிரூப மித்ரா என்பவர் எழுதியுள்ள கட்டுரையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த உடன்பாட்டில் கூறப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தரவாதங்கள் நடைமுறைப் படுத்தப்படும் என்று இந்தியா நம்புகிறது, எனினும், இந்த துன்பகரமான விற்பனை போன்ற நிலை அண்டை நாட்டில் உள்ள ஏனைய திட்டங்களுக்கும் ஏற்படுமோ என்ற அச்சமும் அதற்கு உள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாட்டை புதுடில்லி வரவேற்கவில்லை. ஆனால், சீனாவின் கடன் பளுவில் இருந்து தப்பிப்பதற்கு, கொழும்புக்கு வேறு நல்ல வழி இல்லை. இதனால், அம்பாந்தோட்டையை சீன நிறுவனம் நிர்வகிப்பதை ஏற்றுக்கொள்வதைவிட இந்தியாவுக்கு வேறு தெரிவு இல்லை.

இந்த உடன்பாடு குறித்த பேச்சுக்கள் மற்றும் அதில் பாதுகாப்பு தொடர்பான சில பிரிவுகளை உட்சேர்ப்பதில், அமெரிக்காவுடன் இந்தியாவும், தொடர்பட்டிருந்தன என்றும் உறுதிப்படுத்தமுடிகிறது.

எந்தவோர் இராணுவ செயற்பாடுகளையும் இங்கு முன்னெடுப்பதற்கு கடுமையான தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என்றும் இராணுவ செயற்பாடுகளை மேற்கொள்ளும் முழு உரிமையும் இலங்கைக்கே உள்ளது என்றும் உடன்பாட்டு வரைவில் கூறப்பட்டிருந்தது.

துறைமுக பாதுகாப்புச் சேவைகளில் ஈடுபடும் அனைவருமே இலங்கையர்களாக இருக்க வேண்டும் என்ற விதிமுறையும் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் அந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

துமிந்தவின் பதவியை பறிக்கவே வேண்டாம்!

மஹிந்த அமரவீர கோரிக்கை!

கொழும்பு,ஓக.01

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிலிருந்து அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவை நீக்க வேண்டும் என அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரான இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா வலியுறுத்தியுள்ள நிலையில், அதற்குரிய தேவைப்பாடு இல்லையென அமைச்சர் மஹிந்த அமரவீர கூறியுள்ளார்.

துமிந்த திஸாநாயக்க சிறந்த இளம் தலைவராகச் செயற்பட்டு வருகின்றார் என்று சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரான அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நெருங்கிய சகாக்களுள் ஒருவராகக் கருதப்படும் அமைச்சர் மஹிந்த அமரவீர, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத்துக்கு சீனாவின் மடிக் கணினிகள்!

கொழும்பு, ஓக. 01

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும், நாடாளுமன்றத்துக்குள் பயன்படுத்துவதற்காக இணைய வசதிகளுடன் கூடிய மடிக் கணினிகள் பொருத்தப்பட உள்ளன.

நாடாளுமன்ற அவையில், இந்த வாரத்தில் இருந்து இணைய வசதிகளுடன் இந்த மடிக்கணினிகளைப் பயன்படுத்த முடியும் என்று, நாடாளுமன்ற நிதி பணிப்பாளர் ஜெயசாந்த தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்ற அவையில் உள்ள உறுப்பினர்களின் ஆசனங்களில் இந்த மடிக் கணினிகள் பொருத்தப்பட உள்ளன.

இதற்காகசீனா அன்பளிப்புச் செய்த 265 கணினிகள் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்துக்குக் கிடைத்துள்ளன.

எதிர்வரும்வெள்ளிக்கிழமை நடக்கவுள்ள நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வுக்கு முன்னதாக, இந்தக் கணினிகள் உறுப்பினர்களின் ஆசனங்களுடன் பொருத்தப்படும்.

இது, நாடாளுமன்ற அமர்வு

களின் போது, உறுப்பினர்கள் நீண்ட நேரம் சபையில் அமர்ந்திருப்பதற்கு உதவியாக இருக்கும்.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டு முன்னேற்ற அறிக்கைகள், ஆவணங்கள் குறுவட்டாக வழங்கப்படுகின்றன. கணினிகள் பொருத்தப்பட்டதும் அதனை சபையில் இருந்தவாறே அவர்கள் பார்த்துக் கொள்ள முடியும். விவாதங்களின்போது பயன்படுத்திக் கொள்ளவும் முடியும்.

இந்த மடிக்கணினிகள் ஒவ்வொன்றும் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியானவை என்றும், சீனாவின் இந்த கொடையின் மொத்த மதிப்பு சுமார் 3கோடி ரூபா என்றும்அவர்தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

தண்ணீர் வேண்டி குடம் சுமக்கும் மகளிர்

நாட்டின் பல பாகங்களிலும் இப்போது கடும் வரட்சி உண்டாகி உள்ளது. புத்தளம் மாவட்டத்திலும் தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. அதனை நிவர்த்தி செய்வதற்கு வேண்டுதல் செய்து, அங்கு எழுந்தருளி உள்ள முத்துமாரி அம்மனை, அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மகளிர் தலைமேல் குடம் சுமந்து, வரிசையில் நடந்து செல்கின்றமையை மேலே படத்தில் காணலாம். (அ)

தினசரி ராசி பலன் 01.08.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 17 ஆம் நாள் நவமித்திதி பகல் 11.53 மணி வரை. பின்னர் தசமி. நட்சத்திரம்: விசாகம் பகல் 12.21 மணி வரை. பின்னர் அனுஷம். மரணயோகம் பகல் 12.21 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: மாலை 3.24 மணி முதல் 4.57 மணி வரை. சுபநேரம்: பகல் 10.34 மணி முதல் 12.04 மணி வரை. திவசம் செய்ய வேண்டியதிதி: ஆடிமாத வளர்பிறை தசமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: விசாகம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

மேஷம்: சமபலன்கள் காணப்படுகின்றன. எதிர்பாராத பணச் செலவுகள் உண்டாகும். வீண் அலைச்சல் கள் உண்டாகும். ஆரோக்கியம் பாதிப்படையும். வியாபார வளர்ச்சி குன்றும்.

ரிஷபம் : யோகமான பலன்கள் காணப்படுகின்றன. தனலாபம் பெருகும். தொழிலாளர்களுக்கு செய்தொழிலில் விருத்தி உண்டாகும். வேலைவாய்ப்பை நாடுவோருக்கு வாய்ப்புகளுண்டாகும்.

மிதுனம் : இன்பமான நாள். மனச்சந்தோஷம் அதிகரிக்கும். குடும்பஉறவுகள்மிகவும்சந்தோஷகரமாக இருக்கும். வியாபாரம் விறுவிறுப்புடன் நடக்கும்.

கடகம் : கவலையான நாள். பணமுடை ஏற்படும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளுவும், செலவும் அதிகரிக்கும்.

சிம்மம் : மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவில் பார்க்க மிதமிஞ்சிய செலவுகள் உண்டாகும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும்.

கன்னி: உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். குடும்பத்தில் நல்லுறவு விருத்தியடையும். மாணவர்களுக்கு கல்வி ஊக்கம் அதிகரிக்கும்.

துலாம் : மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்களின் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நேரும்.

விருச்சிகம் : துன்பமான நாள். எண்ணிய கருமங்கள் நிறைவேறாமல் போகும். சுற்றாடல் அமைதி பாதிப் படையும். வியாபாரிகளுக்கு அயல் கடைக் காரருடன் பிரச்சினை ஏற்படும்.

தனுசு : இன்பமான நாள். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். நண்பர்களுடன் சேர்ந்து இனிய சுற்றுலா செல்வார்கள்.

மகரம் : சமபலன்கள் காணப்படுகின்றன. பண விடயத்தில் ஏற்ற, இறக்க நிலை உண்டாகும். தேகாரோக்கியம் சீராக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு எடுத்த காரியங்களில் தடங்கல் ஏற்படும்.

கும்பம்: உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். இல்லறவாழ்வில் அமைதி நிலவும். வியாபார நடவடிக்கைகள் பெருகும்.

மீனம் : கவலையான நாள். பணவரவு குறையும் தேகசுகம் பாதிப்புறும். மருத்துச் செலவுகள் உண்டாகும். கடன் தொல்லைகள் அதிகமாகும்.

சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் நற்கருமங்களைத் தவிர்க்க வேண்டும்.

தோட்ட நிர்வாகத்தின் செயற்பாடுகளைக் கண்டித்து:

லிந்துலை தொழிலாளர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்!

லிந்துலை, ஓக.01

தோட்டநிர்வாகத்தின்செயற் பாடுகளைக் கண்டித்து நுவ ரெலியா மாவட்டத்தின் லிந் துலை வோல்ட்றீம் தோட்டக் கவிலினா பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்கள் நேற்றுத் திங்கட்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

இந்தப் போராட்டத்தில் 100 இற்கும் மேற்பட்ட தொழி லாளர்கள் கலந்து கொண்டனர்.

2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி இந்தப் பகுதியில் வீசிய மினிசூறா வளியால் 45 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமாகின. இதனால், அந்தப் பகுதியில் உள்ள மக் கள் தோட்டத்தில் உள்ள சிறு வர் பராமரிப்பு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டனர். அவர் களுக்கான நிவாரண உதவி களும் வழங்கப்பட்டன.

இந்த நிலையில், பாதிக் கப்பட்ட மக்களுக்கு 48 வீடு களை அமைப்பதற்கு மலை நாட்டுப் புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இருந்த போதிலும் தோட்ட நிர்வாகம் காணிகளை வழங்கு வதற்கு மறுப்புத் தெரிவித்து வந்தது.

காணிகளை வழங்குமாறு தோட்டப் பொது மக்கள் பல தடவை தோட்ட நிர்வாகத்தினரிடம் கோரிக்கைகளை முன் வைத்தனர். இருந்த போதிலும், தோட்ட அதிகாரியால் உரிய பதில் வழங்கப்படவில்லை. இந்த நிலையிலேயே மேற்படி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது. (ச)

நட்பு நாடுகளின் அபிவிருத்தியே இந்தியாவின் எதிர்பார்ப்பாகும்!

இந்தியத் துணைத் தூதுவர் நடராஜன் தெரிவிப்பு

அண்டை நாடுகள் மற்றும் நட்பு நாடுகள் அனைத்துத் துறைகளிலும் அபிவிருத்தி அடைய வேண்டும் என்பதே இந்தியாவின் எதிர்பார்ப்பாகும்.

-இவ்வாறு யாழ்ப்பாண இந்திய தூதுராகத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

இந்திய தொழிலதிபர் சுவாமிநாதனின் யாழ். விஜயம் மற்றும்கொழும்பில்நடைபெற வுள்ள பிளாஸ்ரிக் கண்காட்சி என்பன தொடர்பான கலந்து ரையாடல் யாழ். கிறீன் கிறாஸ் விடுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற் றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

இந்திய இலங்கை உறவு எப்போதும் மேலோங்கி வளர வேண்டும். அப்போது தான் வாழ்க்கையில் முன்னேற முடியும். நாடும் முன்னேற முடியும். தெற்காசிய கண்டத்தில் எமது நாடுகள் வளமான நாடுகளாக உருவாக வேண்டும். அதற்கு நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

கினிகத்தேனையில் விபத்து: நான்கு பேர் படுகாயம்!

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதி கினிகத்தேனை பதுபொல எனும் இடத்தில் கார் ஒன்று மின் கம்பத் தூணுடன் மோதி விபத்துக் குள்ளானதில் நான்கு பேர் படுகாய மடைந்தனர்.

இந்த விபத்து நேற்றுத் திங்கட் கிழமை இடம்பெற்றது.

விபத்தில் படுகாயம் அடைந்த நான்வரும் கினிகத்தேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப் பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சாரதியின் கவனயீனமே இந்த விபத்துக்குக் காரணம் என கினிகத் தேனை பொலிஸார் தெரிவித்துள்ள னர். இந்த விபத்தின் கராணமாக மின்கம்பம் சேதமடைந்தமையால், அப்பிரதேச மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது எனவும், அத னைச்சீர்செய்வதற்குநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் பொலி ஸார் மேலும் தெரிவித்தனர். (ச)

■ கே.வாசு

தற்போதைய அரச மைப்புச் சீர்திருத்த முயற்சியில் மக்களை– இளைஞர், யுவதிகளை– முழுமையான பங்காளிகளாக்கி அவர்களின் எதிர் பார்ப்பை நிறைவு செய்யும் அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சிக்கு ஒத்து ழைக்கும் விதத்தில் அந்த விடயத்தில் அதிக ஈடுபாட்டுடன் பங் களித்து வருகின்றது அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் வலைய மைப்பு. அதையொட்டிய கட்டுரை இது.

மக்கள் விரும்பும் அரசமைப்பு எது?

இலங்கையின் சுதந்திரத் திற்குப் பின் இந்த நாட் டில் மூன்றாவது அரச மைப்பு சீர்திருத்தம் தொடர்பில் பேசப்படுகின்றது. இந்த நாட்டில் மூன்று தசாப்த காலத்துக்கு மேலாகப் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்குப் புதிய அரச மைப்பின் மூலம் நிரந்தரத் தீர்வு காணப்படும் என மைத்திரி - ரணில் கூட்டரசு தேர்தல் மேடைகளில் வாக்குறுதியளித்தது. இவற்றுடன் இந்த நாட்டில் நடைமுறையில் உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் மற்றும் தேர்தல்திருத்தத்தைமேற்கொள்ளுதல் என்பன தொடர்பாகவும் தேர்தல் மேடைகளில் பேசப்பட்டன. இதில் நடைமுறை அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் சில குறைக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை யுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தேர்தல் திருத்தச் சட்டமூலத்தைக் கூட தற்போதைய அரசமைப்பின் திருத்தச் சட்டத்தின் மூலம் நிறை வேற்றுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால், இந்த நாட்டின் தேசிய இனப் பிரச்சி னைத் தீர்வு என்பது கேள்விக்குறியாக வேயுள்ளது. ஆட்சியில் இருக்கும் இரு பிரதான கட்சிகளும் தமக்குத் தேவையான இரு விடயங்களையும் திருத்தச் சட்டத்தின் மூலம் நிறை வேற்றவுள்ள நிலையில் இனப்பிரச் சினைத் தீர்வுக்காக ஓர் அரசமைப்பு வருமா என்பது சந்தேகமே. தென் னிலங்கையின் அரச பிரதானிகளின் மாறுபட்ட கருத்துக்களும், பௌத்த மகாநாயக்கர்களின் கருத்துக்களும் அதனை வெளிப்படுத்துவனவாகவே அமைந்திருக்கின்றன. நல்லாட்சி எனக் கூறப்படும் இந்த நாட்டின் ஜனா திபதி கூட மகாநாயக்கர்களின் கருத் துக்களை ஏற்றுக் கொண்டுள்ளமை போலவே அவரது செயற்பாடுகளும் கருத்துக்களும் அமைந்திருக்கின்றன.

புதிய அரசமைப்பு மக்களுக்குத் தெளிவில்லை

உண்மையில் புதிய அரசமைப்பு தொடர்பில் மக்களுக்குத் தெளி வில்லாத நிலைமையே காணப்படு கின்றது. சிங்கள மக்கள் புதிய அரச மைப்புக்கு ஆதரவு இல்லை எனவும் பேசப்படுகிறது. ஆனால், மக்கள் மத்தியில் புதிய அரசமைப்பு குறித்தும் அதன் தேவை குறித்தும் எந்த அரசியல் கட்சியும் தெளிவுபடுத்திய தாகவுமில்லை. ஆக, தமிழ் அரசியல் கட்சிகளும் சரி, தென்னிலங்கையின் பெரும்பான்மையினத்தைப் பிரதி பலிக்கும் கட்சிகளும் சரி, இஸ்லாமிய கட்சிகளும் சரி புதிய அரசமைப்பு தொடர்பில்மக்களுக்குத்தெளிவூட்டத் தவறியிருக்கின்றன. தமிழ் அரசியல் தலைமைகளுடன் பேசும் போது புதிய அரசமைப்புக்குத் தென்னிலங் கையில் எதிர்ப்பு இருப்பதாகவே அவை கூறுகின்றன. ஆனால், அந்த எதிர்ப்பைச் சமாளிப்பதற்கு அல்லது தென்னிலங்கை மக்களுக்கு அதனைத் தெளிவுபடுத்த ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும்இதுவரை அவர்களால் மேற்கொள்ளப்படவில்லை. உண்மை யில் சொல்லப்போனால், தென்னி லங்கை மக்களிடமும் புதிய அரச மைப்பு தொடர்பான தெளிவில்லாத நிலைமையே காணப்படுகின்றது.

இந்த நிலையில், இலங்கை முழுவ தும் உள்ள இளைஞர், யுவதிகள் மற்றும் பொதுமக்களிடம் புதிய அரசமைப்பு தொடர்பில் கருத்தறிதல் மற்றும் தெளி வூட்டல் நடவடிக்கை ஒன்றை அன்புக் கும் நட்புக்குமான இளைஞர் வலை யமைப்பு மேற்கொண்டிருந்தது.

இதன் ஒரு கட்டமாக நாடு முழு வதும் 500 இற்கு மேற்பட்ட கூட்டங் களை கிராம மட்டங்களில் நடத்தியுள் ளது. இந்தக் கூட்டங்களில் தமிழ், சிங் களம், முஸ்லிம் என்ற வேறுபாடு இன்றி பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். இதன்போது அந்த மக்களும் புதிய அரசமைப்பு தொடர்பில் ஆர்வம் உள்ளவர்களாகவே இருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. ஆனால், அவர்களி டம் புதிய அரசமைப்புத் தொடர்பான தெளிவான அறிவு, தெளிவான பார்வை, தெளிவான சிந்தனை காணப்பட வில்லை.

மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு இல்லை

மக்களுக்கு அரசியல் பேச விரும்பம் இருந்தது. ஆனால், அவர்களை வழி நடத்த ஒருவரும் இருக்கவில்லை. மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு இல்லை. அவர்கள் ஆர்வமற்றவர்கள். அரசமைப்புப் பற்றி தெளிவில்லை.- என அரசும் சரி, அம் மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தும் கட்சிகளும் சரி, அரச சார்பற்ற நிறுவனங்களும் சரி, கூறிக் கொண்டார்களே தவிர அதனை மாற்ற முன்வரவில்லை. அரசியல் வாதிகளுக்கு புதிய அரசமைப்பில் தமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது. தமது அதிகாரத்தை எப்படி கூட்ட முடியும் என்ற சிந்தனையே அதிக மானவர்களிடம் இருக்கிறதே தவிர, அதில் மக்களுக்கு என்ன நன்மை இருக்கிறது என்ற சிந்தனை அவர்களி டம் இல்லாத நிலையே காணப் படுகின்றது.

ஜனாதிபதியின் ஒரே ஆயுதம் நிறைவேற்று அதிகாரமே!

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையின் அதிகாரத்தை முழுமை யாக நீக்குவதற்கு ஜனாதிபதி கூட தற்போது விரும்புபவராகத் தெரிய வில்லை. ஏனெனில், தென்னிலங் கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட் சியை கட்டுப்படுத்த அவரிடம் இருக் கும் ஒரே வலு இந்த நிறை வேற்று அதிகாரமே.

தேர்தல் காலங்களில் எல்லா இன மும், எல்லா மதமும் ஒரே மாதிரி இருக்க வேண்டும் என இந்த நாட் டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். ஆனால், தற்போது புதிய அரசமைப்பு பற்றி பேசும் நேரத் தில் புத்த மதத்துக்கான முன்னுரிமை பற்றி அவர் பேசுகிறார்.

தேர்தலின்போது இந்த நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி பற்றி யாரும் சிந்திப்பவர்களாகத் தெரியவில்லை.

மறுபுறம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தை மீளப்பெறுவ தற்காக புதிய அரசமைப்பு நாட்டை பிரிக்கிறது என்ற கருத்தை தென்னி லங்கையில் முன்வைத்து அதன் மூலம் மக்கள் மத்தியில் அரசியல் ஆதாயம் தேட முனைகிறார்.

நீண்டகாலமாகப் போருக்கு முகம் கொடுத்து அந்த போரால் பாதிக்கப் பட்ட தமிழ் மக்களைப் பிரதிநிதித் துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் அவர்களும் காத்திரமாகப் பணியாற்றுவதாகத் தெரியவில்லை.

உண்மையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு இந்த நாட்டில் இருக்கின்ற பிரச்சினைகள் தீர்க்கப் பட்டு ஒரு நல்லிணக்கத்துக்கான அரசமைப்பு இல்லை என்ற ஒரு கவலை இருக்கிறது. அரசியல்வாதி களின் அதிகாரத்தைக் கூட்டும் அரசமைப்புக்கு மக்கள் எதிராக இருக்கின்றார்கள். மக்கள் மத்தியில் இருந்து அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய அரசமைப்புக்கு அத் தரப்பும் எதிர்ப்பு இல்லை என்பதை கலந்துரையாடல்களில் தெரிவித்துள் ளனர்.

காணிப் பிரச்சினை

காணிப் பிரச்சினை என்பது வடக்குக்கு மட்டுமன்றி தென்பகுதி மற்றும் மலையகம் என எல்லாப் பகுதிகளிலும் உள்ளது.

குறிப்பாக சிவனொளிபாத மலையை அண்டியுள்ள சிறிபாகம பகுதியில் வாழும் மக்களுக்கும் காணிப்பிரச்சினை இருக்கிறது.

(14 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

மொசூல் ‘‘விடுதலை’’

மொசூல் ‘‘விடுதலையை, ’’எல்லா நாகரிக மக்களுக்கும் எதிரிகளாக உள்ள பயங்கரவாதிகள் மீதான வெற்றியாக’’ கொண்டாடி, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 10.06.2017 திங்களன்று ஓர் அறிக்கை வெளியிட்டார்.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் அண்ணளவாக இரண்டு மில்லியன் மக்களைக் கொண்டிருந்த அந்நகரம், அண்மைய ஒன்பது மாதங்களாக மரணகதியிலான முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. மொசூலின் சீரழிந்த காட்சிகளை, இரண்டாம் உலக போரில் ஐரோப்பிய நகரங்களுக்கு நேர்ந்த அதே மாதிரியான சீரழிவுடன் மட்டுமே ஒப்பிட முடியும். ஒரேயொரு வீடோ அல்லது வர்த்தக கட்டடமோ கூட முழுமையாக விட்டுவைக்கப்படாமல், ஏவுகணைகள், குண்டுகள் மற்றும் தோட்டாக்களால் மேற்கு மொசூலின் இந்த பண்டைய சிற்றூர், இந்த பண்டைய நகரத்தின் இதயதானம், பெரிதும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

அப்பாவி மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இந்தக் குற்றங்கள், ஹிட்லரால் செய்யப்பட்ட அளவிற்கு உள்ளன. சுமார் ஒரு மில்லியன் மக்கள் அவர்கள் வீடுகளை விட்டு விரட்டப்பட்டுள்ளனர். இந்நகரில் சிக்கியவர்கள் அமெரிக்க போர் விமானங்களில் இருந்தும், தாக்கும் ஹெலிகொப்டர்கள் மற்றும் கனரக பீரங்களில் இருந்தும் தொடர்ச்சியாக வீசப்படும் குண்டுவீச்சுக்கு ஆளானார்கள். இந்த முற்றுகையின் ஆரம்பத்தில், அடிப்படை உள்கட்டமைப்பு அழிக்கப்பட்டு சகல விநியோக பாதைகளும் மூடப்பட்டதால், நூறாயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளால் மின்சாரம், சுத்தமான குடிதண்ணீர், போதிய உணவு மற்றும் மருத்துவ கவனிப்பைப் பெற முடியாமல் போனது.

அமெரிக்க-ஆதரவிலான ஈராக்கிய படைகள் இடிபாடுகளின் மேல் கூத்தாடிக் கொண்டிருந்தனர்.

உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒருபோதும் தெரிந்துகொள்ள முடியாமல் போகலாம். அடையாளம் தெரியாத அழுகிய சடலங்களின் நாற்றங்களுக்கு இடையே அமெரிக்க-ஆதரவிலான ஈராக்கிய படைகள் இடிபாடுகளின் மேல் கூத்தாடிக் கொண்டிருந்தனர் என்ற கொடூர உண்மை, அவர்களது வெற்றி கொண்டாட்டங்களைக் குறிப்பிடும் செய்திகளில் மறைக்கப்படுகின்றன.

அமெரிக்க தலைமையிலான ‘‘கூட்டணி’’ பெப்ரவரி மற்றும் ஜூன் 2017இற்கு இடையே தொடங்கிய தாக்குதல்களின் விளைவாக 5,805 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என ஏர்வார்ஸ் கண்காணிப்பு குழு ஆவணப்படுத்தி உள்ளது. அந்த முற்றுகையின் முதல் நான்கு மாதங்களில் காயமடைந்த வர்களையும் அத்துடன் கடந்த மூன்று வாரங்கள் நடந்த பயங்கர குண்டுவீச்சுக்களில் காயமடைந்தவர்களையும் உள்ளடக்காத இந்த புள்ளிவிவரம், மிகப்பெரிய குறைமதிப்பீடாகும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. பத்தாயிரக் கணக்கானவர்களுக்கு அதிகமானவர்கள் காயமடைந்திருக்கலாம்.

சுற்றிவளைக்கப்பட்ட அந்நகரில் இருந்து தப்பித்த சிறுவர்களும் ஆண்களும் ISIS நபர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கையாளப்பட்டனர், பலர் கடும் விசாரணைக்கும், கொடூரமான சித்திரவதை மற்றும் நீதி விசாரணையற்ற படுகொலைக்கும் உட்படுத்தப்பட்டனர், இவை அனைத்தும் அமெரிக்க சிறப்புப்படை ‘‘ஆலோசகர்களின்’’ கண்களுக்கு முன்னாலேயே நடந்துள்ளன.

‘‘மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியில் பயன்படுத்தக்கூடாத ஆயுதங்களைக் கொண்டு கொடூரமான குண்டுவீச்சு தாக்குதலுக்கு’’ அப்பாவி மக்கள் உள்ளாக்கப்பட்டனர் என Amnesty International அறிக்கை

‘‘என்ன விலை கொடுத்தாவது: மேற்கு மொசூலில் அப்பாவி மக்களின் மோசமான படுகொலை, என்று தலைப்பிட்டு சர்வஜன பொதுமன்னிப்புச் சபை (Amnesty International) 11.07.2017 செவ்வாயன்று ஓர் அறிக்கை வெளியிட் டது, ’’மக்கள் நெருக்கமாக வாழும் பகுதி யில் பயன்படுத்தக்கூடாத ஆயுதங்களைக் கொண்டு கொடூரமான குண்டுவீச்சு தாக்குதலுக்கு’’ அப்பாவி மக்கள் உள்ளாக்கப்பட்டனர் என்பதை அது நினைவூட்டியது.

அமெரிக்க அரசாங்கத்தை ஏறத்தாழ கவனமாக கையாளும் அதன் பாணியில், சர்வஜன பொதுமன்னிப்புசபை அறிக்கை குறிப்பிட்டது, அமெரிக்க தலைமையிலான கூட்டணி படைகள் சர்வதேச சட்டத்தை மீண்டும் மீண்டும் மீறியுள்ளன என்று தெரிகிறது, அவற்றில் சில போர் குற்றங்களுக்கு நிகரானதாகும். போர் குற்றங்களுக்கு பொறுப்பாக சரியான காரணங்களுடன் சந்தேகிக்கப்படுபவர் கள் மீது வழக்குத் தொடுப்பதற்காக’’, சர்வதேச மனிதாபிமான சட்டம் மீறப்பட்டிருப்பதைக் காட்டும் நம்பகமான தகவல் மீது சுதந்திரமான மற்றும் வெளிப்படையான விசாரணைகள்’’ நடத்த அந்த அமைப்பு அழைப்பு விடுத்தது.

(கேள்வி தொடரும்)

சுதந்திர வேட்கை

அத்தியாயம் - IV

இந்திய - இலங்கை உடன்பாடு

கொந்தளிப்பான இந்த நாள்களில் கிட்டு எம்மிடம் சென்னைக்கு வந்தார். யாழ்ப்பாணத்தில் கிட்டுவைக் கொல்ல மேற்கொள்ளப்பட்ட முயற்சியில் அவர் தப்பிப் பிழைத்திருந்தார். அந்தத் தாக்குதலில் கால் துண்டிக்கப்பட்ட நிலையிலே மருத்துவச் சிகிச்சைக்காகச் சென்னை வந்திருந்தார். இதே கால கட்டத்தில் இலங்கைத் தேசிய நெருக்கடிக்கு, அரசியற் தீர்வு ஒன்றை உருவாக்கும் முயற்சி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே தீவிரம் பெறுவதாக ஊடகச் செய்திகள் தெரிவித்தன. இந்த முயற்சி புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையில் மட்டுமே நடந்து கொண்டிருந்தது. விடுதலைப் புலிகளுடன் காத்திரமான ஆலோசனை எதுவும் நடக்கவில்லை. இந்தப் புதிய அரசியல் முயற்சி பாலாவுக்கு திருப்தி தரவில்லை. விடுதலைப் புலிகளைக் கலந்தாலோசிக்காமல், ஓர் அரசியல் தீர்வை அவர்கள் எப்படி எடுக்க முடிவு செய்யலாம் என்பதே அவர் வாதம். எவ்வளவு தான் ஆழமான பேச்சுக்களை நடத்தினாலும் சரி, இரு நாடுகளுக்கும் மத்தியில் அரசியல் இணக்கம் காணப்பட்டாலும் சரி, விடுதலைப் புலிகளைப் புறக்கணித்து எடுக்கும் முடிவு, புலிகள் மீதும் தமிழினம் மீதும் திணிக்கப்பட்ட ஒரு தீர்மானமாகவே இருக்கும். அதேசமயம் தமது தேசம் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து விவாதிக்கும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை மீறப்பட்டதாகவும் இருக்கும்.

நிலைமை இவ்வாறு மாற்றமடைவதை யொட்டி, நாம் கவலையோடு இருக்கும் போது, தமிழ்நாட்டு முதலமைச்சருடன் கலந்தாலோசனை நடத்துவதற்காக மாநில காவல்துறையினர் பாலாவை அழைத்துச் சென்றனர். பிரபாகரனும் அவருடைய அணியினரும் யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு அழைத்துவரப்படுகின்றனர் என அவரிடம் அங்கே கூறப்பட்டது. அவர்களோடு சேர்ந்து பாலாவும் சென்னை விமான நிலையத்தில் இருந்து புதுடில்லிக்கு அரசியல் கலந்தாலோசனைக்காகச் செல்லவேண்டும் என்று அவருக்கு அங்கு கூறப்பட்டது. பிரபாகரனுடைய அணியில் யோகியும், யாழ்ப்பாண அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீபனும் இருந்தனர். புதுடில்லியில் இருந்து பாலா எனக்குத் தகவல் தந்தார். இந்திய இலங்கை ஒப்பந்தம் என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கை ஒன்றிலே புதிய யோசனைகள் தங்களுடைய அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிவித்தார். விடுதலைப் புலிகளின் பார்வையிலே அந்த உடன்படிக்கை ஏற்க முடியாத ஒன்று என்றும் கூறினார். தாம் தங்கியிருந்த பயணிகள் விடுதி அறைக்குள்ளேயே தமது நடமாட்டம் முடக்கப்பட்டிருப்பதாகவும், கரும்பூனை அதிரடிப் படையினரால் தாம் சூழப்பட்டிருப்பதாகவும் பாலா அறிவித்தார். யோகரத்தினம் யோகியின் கருத்து வெளிப்படையாவே இருந்தது. தமது அணியினர் அச்சுறுத்தப்படுகின்றனர் எனவும், தாம் வீட்டு மறியலில் வைக்கப்பட்டிருக்கிறோம் எனவும் யோகி கூறினார். தொலைபேசியில் அவருடைய சீற்றம் தெரிந்தது. தங்கியிருந்த விடுதியில் இருந்து வெளியே தொலைபேசித் தொடர்பு கட்டுப்படுத்தப்படுவதாகவும் அது காரணமாக சிறிது காலத்துக்கேனும் பாலாவிடமிருந்து தொடர்பு எதுவும் கிடைக்காமல் போகலாம் என்றும் அவர் கூறினார். புதுடில்லியில் இருந்து சில நாள் கழித்து அவர்கள் சென்னை மீண்டபோது புதுடில்லியில் தாங்கள் நடத்திய பேச்சு பற்றியே பாலா ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தார். ஜெயவர்த்தனாவுக்கும், ராஜீவுக்கும் இடையே கைச்சாத்தாக இருந்த ஒப்பந்தம் தொடர்பாகத் தமது ஆழமான நம்பிக்கையீனத்தை பாலா வெளியிட்டார். புதுடில்லியிலே விடுதலைப் புலிகளின் அணி, கடுமையான நெருக்குவாரத்துக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக என்னிடம் அவர் ஒப்புக்கொண்டார். வெளித்தொடர்பு துண்டிக்கப்பட்டு, பலத்த பாதுகாப்புடன் விடுதி அறைகளில் அவர்கள் விடப்பட்டிருந்தார்கள். ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தையும் படித்துப் பார்த்துத் தங்கள் ஒப்புதலை வழங்க, சில மணி நேர அவகாசமே அவர்களுக்கு வழங்கப்பட்டது. ஒப்பந்தத்துக்கு விடுதலைப் புலி அணி ஒப்புதல் அளிக்க மறுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறிலங்காவுக்கான இந்தியத் தூதுவர் டிக்சிற் அச்சுறுத்தியிருந்தார். விடுதலைப் புலிகள் ஒப்பந்தத்தை ஏற்றால் என்ன? நிராகரித்தால் என்ன? அது கைச்சாத்திடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் நிர்தாட்சண்யமாகக் கூறியிருந்தார்.

டிக்சிற் அவர்களுடைய வரம்பு மீறிய, அடாவடித்தனமான இராஜதந்திர அணுகு முறை குறித்து பிரபாகரனும் பாலாவும் சினமடைந்திருந்தார்கள். தமிழ் மக்களின் அரசியல் வேணவாவை அந்த ஒப்பந்தம் சிறிதேனும் நிறைவேற்றாததால், விடுதலைப் புலிகளோ, ஈழத் தமிழ் மக்களோ, அதை ஏற்கமாட்டார்கள் என்று இந்திய இராஜதந்திரியிடம் விடுதலைப் புலிகளின் தலைவர் திட்டவட்டமாகக் கூறியிருந்தார். கடும் நெருக்குவாரம், தொந்தரவு, அச்சுறுத்தல் ஆகியவனவற்றை எதிர் கொண்ட நிலைப்பாட்டை பாலாவும் பிரபாகரனும் பிரதமருக்குத் தெளிவுபடுத்தினார்கள். அதில் கூறப்படும் மாகாண வடிவமைப்பில் உள்ள வரையறைகளையும் குறைபாடுகளையும் விளக்கினார்கள். வடக்கும் கிழக்கும் ஒன்றானது; இணைந்தது; தமிழ் மக்களின் தாயகம்; இந்த ஐக்கிய ஒன்றிணைவை ஒப்பந்தத்தில் கூறுவது போல கருத்து வாக்கெடுப்புக்கு விடுவது அநியாயமானது; ஏற்க முடியாது – என்றும் அவர்கள் வாதாடினார்கள். ஜெயவர்த்தனாவைத் தமிழ் மக்கள் நம்பவில்லை என்றும் ஒருபோதும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அவர் அங்கீகரிக்கமாட்டார் என்றும் ராஜீவ் காந்திக்கும் அவர்கள் விளக்கி உரைத்தார்கள். அதேசமயம், ஒப்பந்தம் கூறும் வடிவம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னதாக ஒப்பந்தத்தில் கூறப்பட்டவாறு, அது கைச்சாத்தான எழுபத்திரண்டு மணிநேரத்துக்குள் தமிழ் விடுதலை அமைப்புகளின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்ற கோரிக்கை ஒரு பெரிய தவறு என்றும் இந்தியத் தலைவருக்கு விளங்கப்படுத்தப்பட்டது. ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட போதும், விடுதலைப் புலிகள் தங்கள் நிலைப்பாட்டில் இருந்து தளரவில்லை. இறுதியில், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, பிரபாகரனையும் பாலாவையும் தமது இல்லத்துக்கு அழைத்தார். ஒப்பந்தம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் கால நிர்வாக அரசு ஒன்றை குறைந்த அதிகாரங்களோடு விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதாகவும் உறுதியளித்தார். ராஜீவின் யோசனை மட்டில் பிரபாகரன் நம்பிக்கை இல்லை என்றும், இந்திய அரசுடன் மோதலைத் தவிர்க்கும் பொருட்டு ராஜீவின் திட்டத்துக்கு தாங்கள் சம்மதித்தனர் எனவும் பாலா என்னிடம் கூறினார். புதுடில்லியில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பாகப் பிரபாகரனுக்குத் திருப்பதி இல்லை. சென்னையில் உள்ள எமது வீட்டுக்கு அவர் வந்தார். அப்போது அவருடைய போராளிகள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் போராட்டத்தை எவ்வாறு பாதிக்கப் போகிறது என்பதை அறியும் பதகளிப்போடு போராளிகள் இருந்தார்கள். தம் மட்டில் இந்திய அதிகாரிகள் அடாவடித்தனமாகவும் அராஜகத்துடனும் நடந்து கொண்டனர் எனக் கருதிய பாலாவும் பிரபாகரனும் கடுப்புடன் இருந்தார்கள். ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலம் முழுவதும் இதே உணர்வே அவர்களிடம் மேவி நின்றது.

(தொடரும்...)

51

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பகம்பமாக வெடித்துச் சீதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சுக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

காலைக்கதிர் Kalaikkathir

ராகு - கேது பெயர்ச்சி பலன்கள் 2017

கடந்த வருடம் இராகு கேது பெயர்ச்சி 08.01.2016 அன்று நிகழ்ந்தது. இந்தக்காலகட்டத்தில் ஒவ்வொரு ராசிக் காரர்களும் அவரவருக்கு ஏற்ற பலன்களையும், பிரச்சினைகளையும் சந்தித் திருப்பார்கள். அதேபோன்று (நேற்று) 27.07.17 அன்று இந்த வருடத்தின் இராகுகேது மீண்டும் பெயர்ச்சி அடைகிறது.

ஹேவிளம்பி வருடமான 2017–ம் ஆண்டு ஆடி 11 ஆம் கடந்த 17 ஆம் திகதி வியாழக் கிழமை அன்று சுக்ல சதுர்த்தியும், உத்திர நட்சத்திரம், சித்த யோகம் கொண்ட நாளில் துலாலக்னத்தில் ராகு பகவான் சிம்ம ராசியில் இருந்து கடக ராசிக்கும், கேது பகவான் கும்ப ராசியில் இருந்து மகரராசிக்கும் இடம் பெயர் கின்றது.

நவக்கிரகங்களில் ராகுவும், கேதும் சாயக் கிரகங்கள் என்று அழைக்கப் படுகிறார்கள். இந்தக் கிரகங்களை பின்நோக்கிச்சென்று பெரும்பலனை நமக்கு அள்ளித் தந்தால் தான் நாம் முன்நோக்கிச் செல்ல முடியும். ஒருவருடைய ஜாதகத்தில் ராகு பலம் பெற்று அமைந்தால் அவர்களுக்கு ராகு பலன்களை அள்ளிக்கொடுப்பார்.

அவர்கள் நல்ல பொருளாதார நிலையை அடைவார்கள். அதே போல் ஒருவர் ஜாதகத்தில் கேது பலம் பெற்று அமைந்தால் நல்ல அறிவாற்றல் கிடைக்கும் ஒருவர் ஜாதகத்தில் லக்னம் அல்லது சந்திரனுக்கு 2,4,7,8,12 ஆகிய இடங்களில் ராகு கேது இருந்தால் திருமணத் தடை, புத்திர பாக்கிய தடை, குடும்ப ஒற்றுமை குறைவு போன்றவை ஏற்படும்.

இந்த ராகு கேது பெயர்ச்சியினால் ஒவ்வொரு இராசிக்காரர் களுக்கும் பலவிதமான பலன்கள் இருக்கும். இந்தப் பெயர்ச்சியால் எந்த இராசிக்காரர்கள் பலன் அடை கிறார்கள் என்று பார்ப்போம்.

பெயர்ச்சியால் நன்மை அடையும் ராசிகள்:

மேஷம், சிம்மம், கன்னி, துலாம், தனுசு, கும்பம்

இந்த ராசிக்காரர்கள் அனைவருக்கும் பாராட்டு, நினைத்த காரியங்கள் எளிதில் கைகூடல், நல்ல தொழில் என அனைத்து வகையிலும் முன்னேற்றம் காண்பர். இதுவரை இருந்த பிரச்சினை கள் நீங்கும். திருமண வயதில் உள்ளவர்களுக்கு விரைவில் திரு மணம் கைகூடும். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.

பெயர்ச்சியால் பரிகாரத்தின் மூலம் நன்மை அடை யும் ராசிகள்:

ரிஷபம், மிதுனம், கடகம், விருச்சிகம், மகரம், மீனம்

இந்த ராசிக்காரர்கள் தெய்வ சந்நிதிகளுக்குச் சென்று வழிபட்டு வந்தால் அனுகூலமான பலன்கள் கிடைக்கும். நாள் பார்த்து வழிபட்டால் கோள்கள் கூட நற்பலன்களைத் தர வாய்ப்புள்ளது.

தனுசு:

தர்மநெறி தவறாத தனுசு ராசி அன்பர் களே!

ராசிக்கு 9ம் இடமான சிம்மத்தில் உள்ள ராகு 8-ம் இடமான கடகத்துக்குச் செல்கிறார். உறவினரால் பிரச்சினை, முயற்சியில் தடை குறுக்கிடலாம். ராசிக்கு 3-ம் இடமான கும்பத்தில் இருந்து கேது 2ம் இட மான மகரத்துக்கு வருகிறார். அரசு வகையில் அனுகூலமான போக்கு இருக் காது. திருட்டுப் போகவும் வாய்ப்புண்டு.

சனிபகவான் தற்போது 12-ம் இடத்தில் இருக்கிறார். ஏழரை சனி காலம் என்பதால் துன்பம் அனுபவித்து இருப்பீர்கள். ஆனால் சனியின் 7-ம் பார்வை மூலம் பொருளாதார வளம் சேரும். டிசெ. 18 ல் உங்கள் ராசிக்கு மாறுவதால் உடல்நலம் பாதிக்கலாம். உறவினர் வகையில் மனக்கசப்பு ஏற்படலாம்.

10-ம் இடத்தில் உள்ள குரு பகவானால், சிரமம் குறுக்கிட்டாலும் அவரது பார்வை பலத்தால் குறையனைத்தும் தீரும். அவர் செப்.1ல் 11-ம் இடத்துக்கு மாறுவது சிறப்பானதாகும். அவரின் 7, 9-ம் இடத்து பார்வையால் நன்மை அதிகரிக்கும். 2018 பெப்.13-ல் 12-ம் இடமான விருச்சிக ராசிக்கு மாறுகிறார். அதன்பின் நன்மை பெற இயலாது.

இனி கால வாரியாக விரிவான பலனைக் காணலாம். 2017 ஜூலை - டிசெம்பர் பணப் புழக்கம் இருந்தாலும் திடீர் செலவு உருவாகும். சிக்கனத்தை கடைபிடிப்பது நல்லது. முயற்சியில் தடை குறுக்கிடலாம். முக்கிய விடயங்களை குடும்ப பெரியவர்களின் ஆலோசனை பெற்று நிறைவேற்றவும். திருமணம் போன்ற சுப விடயங்களில் தடை குறுக்கிடலாம். கணவன் -மனைவி இடையே கருத்துவேறுபாடு தலைதூக்கும். ஓக. 31க்கு பிறகு நிலைமை சீராகும். தொழில், வியாபாரத்தில் வீண் அலைச்சலுக்கு ஆளாகலாம். அரசு வகையில் பிரச்சி னையை தவிர்க்க வரவு-செலவு கணக்கை சரியாக வைத்துக் கொள்ளவும். ஓக. 31-க்கு பிறகு பொருளாதார வளம் மேம்படும்.

பணியாளர்கள் சீரான பலனை எதிர்பார்க்கலாம். சிலர் பதவி அல்லது பொறுப்பை கைவிட வேண்டிய நிலை ஏற்படலாம். குருவின் பார்வைப் பலத்தால் ஓரளவு நன்மை உண்டாகும். ஓக. 31-க்கு பிறகு நன்மையை எதிர்பார்க்க முடியும். கலைஞர்கள் விடாமுயற்சி எடுத்தால் புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பதவி கிடைப்பது அரிது. மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் கவனம் தேவை.

ஆசிரியர்களின் ஆலோசனையை ஏற்றால் முன்னேற்றம் உண்டாகும். பெண்கள் குடும்பத்தில் விட்டுக் கொடுத்து போவது நல்லது. ஓக. 31-க்கு பிறகு நன்மை அதிகரிக்கும். 2018 ஜனவரி- 2019 பெப்ரவரி ராகு -கேது இரண்டும் சாதகமற்று இருந்தாலும் குருபலத்தால் தடைகளை முறியடிக்கும் வலிமை உண்டாகும். 2018 பெப். 13-க்கு பிறகு கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. விருந்து, விழா என செல்ல வாய்ப்புண்டாகும். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் காண்பீர்கள். சிலர் வசதியான வீட்டுக்கு குடிபுக வாய்ப்புண்டு. பொருள் திருட்டுப் போக வாய்ப்புண்டு. எச்சரிக்கையாக இருக்கவும்.

தொழில் வியாபாரத்தில் அனுபவசாலிகளின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில் ரீதியான வெளியூர் பயணம் வெற்றி பெறும். பணியாளர்கள் முக்கிய பொறுப்பை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். 2018 பெப்.13-க்கு பிறகு பணிச்சுமை அதிகரிக்கும். குருபகவான் 2018 ஏப். 9- முதல் செப்.3 வரை வக்ரம் அடைந்து துலாம் ராசிக்கு மாறுகிறார். இதனால் பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். கலைஞர்களுக்கு எதிர்பார்த்த புகழ், பாராட்டு வந்து சேரும்.

2018 பெப். 13-க்கு பிறகு அதிக சிரத்தை எடுத்து படித்தால் மட்டுமே பலன் கிடைக்கும். விவசாயிகள் சிறப்பான பலன் பெறுவர். பெண்களுக்கு குடும்ப வாழ்வு சிறக்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு புதிய பதவி தேடி வரும்.

பரிகாரம்: வெள்ளியன்று நாக தேவதை வழிபாடு சனிக்கிழமையில் அனுமனுக்கு அர்ச்சனை, பிரதோஷத்தன்று சிவனுக்கு நெய்தீபம்.

மகரம்:

அனைவரிடமும் அன்பு காட்டும் மகர ராசி அன்பர்களே!

ராசிக்கு 8ம் இடத்தில் இருக்கும் ராகு, தற் போது 7ம் இடமான கடகத்துக்குச் செல்வதால் தூரதேசம் செல்லவும் அவப்பெயர் ஏற்படவும் வாய்ப்புண்டு. 2ம் இடமான கும்பத்தில் உள்ள கேது, இப்போது உங்கள் ராசிக்கு வருகிறார். இதனால் காரிய தடை, உடல் உபாதை வரலாம்.

11 ம் இடத்தில் உள்ள சனிபகவானால் பணப்புழக்கம் இருந்திருக்கும். டிசெ.18ல் அவர் 12ம் இடத்துக்கு மாறுகிறார். அவரால் பொருளாதார இழப்பு வரலாம். எதிரிகளால் இடையூறு உருவாகலாம். எதிர்நீச்சல் அடித்து உழைத் தால் மட்டுமே வாழ்வில் சாதிக்க முடியும். குருபகவான் 9 ம் இடத்தில் இருப்ப தால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

நினைத்ததை வெற்றிகரமாக செய்து முடிக்கலாம். தேவைகள் பூர்த்தி யாகும். தம்பதியிடையே ஒற்றுமை மேம்படும். சுப நிகழ்ச்சி நடந்தேறும். ஓக. 31க்குப் பிறகு 10 ம் இடத்துக்குச் செல்கிறார். அதன் பின் பொருள் நஷ்டம், மனச் சஞ்சலம் உண்டாகும். 2018 பெப்.13ல் 11ம் இடத்துக்கு மாறிய பின், பொருளாதார வளம் மேம்படும். புதிய பதவி கிடைக்கும்.

இனி கால வாரியாக விரிவான பலனைக் காணலாம். 2017 ஜூலை - டிசெம்பர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி கைகூடும். கணவன் மனைவி இடையே அன்பு மேம்படும். உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். சிலர் புதிய வீடு, மனை வாங்க யோகம் உண்டாகும். 2017 ஓக. 31க்கு பிறகு குரு பகவானால் பொருள் நஷ்டம், மனச் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு. பணியாளர்கள் சீரான முன்னேற்றம் காணலாம். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். எதிர் பார்த்த கோரிக்கை நிறைவேறும். தொழில் வியாபாரிகளுக்கு வளர்ச்சி உண்டாகும். லாபம் அதிகரிக்கும். புதிய தொழில் முயற்சி வெற்றி பெறும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தம் கிடைக்கப் பெறுவர். எதிர்பார்த்த புகழ், பாராட்டு கிடைக்கும்.

அரசியல்வாதிகள் வாழ்வில் மேம்பாடு அடைவர். மாணவர்கள் சிறப்பான வளர்ச்சியை எதிர்பார்க்கலாம். தேர்வில் நல்ல மதிப்பெண் கிடைக்கும். ஓக. 31க்கு பிறகு சிரத்தை எடுத்து படிக்க வேண்டியதிருக்கும். விவசாயிகளுக்கு வருமானத்துக்குக் குறைவிருக்காது. புதிய சொத்து வாங்க சிலகாலம் பொறுத்திருக்க நேரிடும். பெண்கள் வாழ்வில் முன்னேற்றம் காண்பர். தம்பதி யிடையே ஒற்றுமை மேம்படும்.

பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். ஓக. 31க்கு பிறகு குடும்பத்தில் விட்டுக் கொடுக்கவும். 2018 ஜனவரி- 2019 பெப்ரவரி ராகுவால் இடப்பெயர்ச்சி, அவப்பெயரைச் சந்திக்க நேரலாம். நட்பு விடயத்திலும் விழிப்புடன் இருப்பது நல்லது. கேதுவால் முயற்சியில் தடை, உடல் உபாதை ஏற்படலாம். குரு சாதகமாக இல்லை என்றாலும் அவரது பார்வை பலத்தால் தடைகளை சாமர்த்தியமாக முறியடிப்பீர்கள். 2018 பெப்.13க்குப் பிறகு குருவால் சிறப்பான நிலை உருவாகும்.

குடும்பத்தில் பெண்களால் பொன் பொருள் சேரும். உறவினர் வருகையும் அவர்களால் நன்மையும் கிடைக்கும். குரு பகவான் 2018 ஏப். 9 முதல் 2018 செப். 3 வரை வக்ரம் அடைந்து துலாம் ராசிக்கு மாறுகிறார். அப்போது நன்மையை எதிர்பார்க்க முடியாது.

பணியாளர்கள் வேலைப் பளு, அலைச்சலுக்கு ஆளாவர். 2018 பெப்.13க்கு பிறகு வழக்க மான பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை கிடைக்கும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். ஆனால், விடாமுயற்சி அவசியம். அரசியல்வாதிகள் பிரதிபலன் எதிர்பார்க்காமல் உழைக்க வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் கவனம் தேவை. 2018 பெப்ரவரி 13க்கு பிறகு கல்வி வளர்ச்சி காண்பர். குருபார்வையால் போட்டியில் வெற்றி பெறுவர். விவசாயம் சீராக இருக்கும். வழக்கு விவகாரங்களில் சுமாரான பலன் கிடைக்கும். பெண்கள் குடும்பத்தாரிடம் விட்டுக் கொடுத்து போகவும். குருவின் 5ம் பார்வையால் பண வரவு அதிகரிக்கும்.

பரிகாரம்: வெள்ளி ராகு காலத்தில் துர்க்கை வழிபாடு தேய்பிறை அஷ் டமியில் பைரவருக்கு தீபம், சனிக்கிழமையில் கிருஷ்ணருக்கு அர்ச்சனை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைவர்கள் இருவர் இல்லை

மைத்திரிபாலவே தலைவர் என்கிறார் அமைச்சர் துமிந்த

கொழும்பு, ஓக. 01

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு இரண்டு தலைவர்கள் இல்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே அந்தக் கட்சியின் தலைவர். இதில் எந்த மாற்றமும் இல்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாரப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியிருந்த நேர்காணல் தொடர்பில் பதிலளிக்கும் போதே துமிந்த திஸாநாயக்க இதனைக் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து தான் விலகவோ விலக்கப்படவோ இல்லை எனத் தெரிவித்திருந்த முன்னாள் ஜனாதிபதி, தான் கட்சியின் தலைவராக இருக்கின்றமையால், கட்சியின் சம்மேளனத்தையும் கூட்ட முடியும் எனக் கூறியிருந்தார்.

அவரது கருத்துக்குப் பதிலளிக்கும்போது துமிந்த திஸாநாயக்க தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் ஜனாதிபதி கூறினார் என ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளை வாசிக்கும் போது யாருக்கோ தவறிப் போயுள்ளது எனத் தெரிகிறது. தவறியது செய்தியை வெளியிட்ட ஊடகத்துக்காக அல்லது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கா என்று கேள்வி எழுகிறது.

முன்னாள் சபாநாயகரின் இல்லத்தில் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய ஜனாதிபதியும் சந்தித்துக் கொண்டபோது, முன்னாள் ஜனாதிபதி கட்சியின் தலைவர் பதவியை தற்போதைய ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இதனை சமல் ராஜபக்ஷ பகிரங்கமாகக் கூறியிருந்தார். இதனையடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேனவின் பெயர் தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது.

கட்சியின் 64 ஆவது ஆண்டு மாநாடு புதிய தலைவரின் தலைமையிலேயே நடைபெற்றது. அதில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கலந்துகொண்டு மைத்திரிபால சிறிசேனவுக்கு அருகில் இருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அது மாத்திரமல்லாது கடந்த 2015 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சகல மாநாடுகளும், செயற்குழுக் கூட்டங்களும் தற்போதைய தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலேயே நடைபெற்றன.

மேலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பேரிலேயே புதிய தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ம)

முல்லை. வீட்டுத்திட்டத்துக்கான முதற்கட்ட நிதி வழங்கல்

முல்லைத்தீவு, ஓக. 01

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்டகாலமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான செயலணியின் வேலைத்திட்ட வீடமைப்புக்கான நிதியாக 8 லட்சம் ரூபா வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நீராவிப்பிட்டி மேற்கு பொதுநோக்கு மண்டபத்தில் வடமாகாண சபை உறுப்பினர் ஜெனோபர் தலைமையில் நடைபெற்றது.

128 குடும்பங்களுக்கான முதற்கட்ட நிதிவழங்கும் இந்நிகழ்வில் கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் உள்ளிட்ட அதிதிகள் கலந்துகொண்டனர்.

(இ-81)

மாந்தை கிழக்கில் வறட்சியால் 6 ஆயிரத்து 684 பேர் பாதிப்பு

வடக்கில் முல்லைத்தீவு மாவட்டம் வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது என இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு மற்றும் மணலாறு ஆகிய பகுதிகளே இவ்வாறு அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மாந்தை கிழக்கு பகுதியில் 2 ஆயிரத்து 126 குடும்பங்களை சேர்ந்த 6 ஆயிரத்து 684 பேர் வறட்சியால் நீர்த்தட்டுப்பாட்டை எதிர் நோக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வன்னி விளாங்குளம், கண்ணகிபுரம் குளம், கரும்புள்ளியான், நெட்டங்குளம், சிராட்டிக்குளம், செல்வபுரம், பாண்டியன்குளம், அம்பாள்குளம் உள்ளிட்ட பல பகுதிகளும் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் கடும் மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம 81)

சமூர்த்தி வங்கியின் முன்னால் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்!

தென்மராட்சி வரணியில் நேற்று

தென்மராட்சி, ஓக. 01

தென்மராட்சி வரணி பகுதியில் அமைந்துள்ள சமூர்த்தி வங்கியை முற்றுகையிட்டு நேற்றுக் காலை பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சமூர்த்திக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வரணி பகுதியைச் சேர்ந்த 15 இற்கும் மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளிலும் சமூர்த்திக் கொடுப்பனவு நிறுத்தப்பட்ட மக்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

தற்போது சமூர்த்தி மீளாய்வு இடம்பெற்று பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதில் அநேகமான பயனாளிகள் வறுமையில் உள்ள போதிலும் அவர்களுக்கு சமூர்த்திக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு தமக்கு நியாயமான தீர்வு வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, சமூர்த்திப் பயனாளிகளின் மீளாய்வு பல்வேறு தகுதிகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டே தெரிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் சமூர்த்தி தேவை உள்ளவர்கள் பலரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

(க-21)

சுதந்திரக் கட்சியை ஆட்டிப்படைக்கின்றது ஐ.தே.கட்சி!

பிதற்றுகிறார் பிரசன்ன ரணதுங்க எம்.பி.

கொழும்பு, ஓக. 01

பொம்மை தலைவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியின் கைகளால் ஆட்டுவிக்கும் பொம்மையாக மாற்றி விட்டனர் என கூட்டு எதிர்க்கட்சியின் ஒருங்கிணைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது மிகவும் கஷ்டமான நிலைமைக்குள் விழுந்துள்ளது.

பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகள் நாட்டுக்கு பொருத்தமற்றன என்ற காரணத்தினாலேயே அவர் அதில் இருந்து விலகி இந்தக் கட்சியை ஆரம்பித்தார்.

ஆனால், தற்போது என்ன நடந்துள்ளது. கட்சியின் தலைவரே எமது அன்புக்குரிய கட்சியை, அன்று பண்டாரநாயக்க கூட நிராகரித்த ஐக்கிய தேசியக்கட்சியின் வாலில் கட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி கூறுதற்கு இணங்கவே இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்படுகிறது.

கட்சித் தலைவர்களின் தூர நோக்கற்ற வேலைத்திட்டங்கள் காரணமாகவே நாட்டின் வளங்களை விற்பனை செய்து, தொழிற்சங்கப் போராட்டங்களை வன்முறையில் அடக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொலைகார பயணத்துக்கு கட்சி பங்காளியாக மாறியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

3 மாகாண சபைகளின் நிர்வாகம் ஆளுநர்களின் கைகளில்!

கொழும்பு, ஓக. 01

எதிர்வரும் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் பதவிக்காலம் முடிவடையவுள்ள கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் நிர்வாகம் அடுத்த தேர்தல்வரை ஆளுநர்களின் நிர்வாகத்துக்கு ஒப்படைக்கப்படலாமென அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சகல மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்துவதென கடந்த வாரம் அமைச்சரவை தீர்மானித்திருப்பதால் இந்த மூன்று மாகாண சபைகளின் நிர்வாகம் ஒக்ரோபர் முதல் ஆளுநர்களிடம் ஒப்படைக்கப்படலாம் என அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, மத்திய, வடமேல், வட மாகாண சபைகளின் பதவிக்காலம் 2019 ஒக்ரோபரிலும், மேல் மற்றும் தென் மாகாண சபைகளின் பதவிக்காலம் 2019 ஏப்ரலிலும், ஊவா மாகாண சபையின் பதவிக்காலம் 2019 செப்ரெம்பரிலும் முடிவடையவுள்ளதால் 2019 ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னர் மாகாண சபைகள் அனைத்துக்குமான தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இல்லையெனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(க)

காலைக்கதிர் Kalaikkathir

அரியானா மாநிலம், கர்னல் மாவட்டத்தில்

வான் – லொறி கோர விபத்து; 7 பேர் சாவு; 14 பேர் படுகாயம்!

அரியானா மாநிலத்தின் கர்னல் மாவட்டத்தில் உள்ள மீருட் சாலையில் நேற்று வான் மீது லொறி மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் வானில் பயணம் செய்த சிறுவன் உட்பட 7 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயமடைந்த 14 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து கர்னல் மாவட்டத்தில் உள்ள சடார் காவல் நிலைய தலைமை அதிகாரி மனோஜ் குமார் கூறுகையில்-

21 பயணிகளுடன் ஹரித்துவாரிலிருந்து வான் கர்னல் மாவட்டத் திற்கு திரும்பி வந்து கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டிருக்கின்றது. இந்த விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த மற்ற பயணிகள் கல்பனா சாவ்லா மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 6 பேர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார். (ப)

பாடை கட்டி ஊர்வலம் சென்றனர் டில்லியில் விவசாயிகள்!

தென்னிந்திய நதிகள் இணைப்பு சங்க தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் தமிழக விவசாயிகள் டில்லியில் போராட்டம் நடத்தி வருகிறார்கள். டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் நடைபெற்று வரும் இந்தப் போராட்டம் நேற்று 15 ஆவது நாளாக நீடித்தது.

நூதன முறையில் போராட்டம் நடத்தி வரும் அவர்கள், நேற்று பாடை கட்டி அதில் ஒருவரை படுக்க வைத்து, சிறிது தூரம் ஊர்வலமாகத் தூக்கிச் சென்று விட்டுத் திரும்பினார்கள்.

பின்னர் அய்யாக்கண்ணு நிருபர்களிடம் கூறுகையில், 'தமிழகத்தில் வறட்சியால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது. ஆனால், விவசாயிகளின் கோரிக்கைகளை மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை. எனவே, அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஒவ்வொரு நாளும் நூதனமான முறையில் போராட்டம் நடத்தி வருகிறோம்' என்று அய்யாக்கண்ணு தெரிவித்துள்ளார்.

அசாம் வெள்ளத்தில் இதுவரை 82 பேர் சாவு!

அசாம் மாநிலத்தில் சமீபத்தில் பெய்த கனமழை காரணமாக பல்வேறு மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. லகிம்பூர், ஜோர்ஹாட், கோலாகாட், சச்சார், தெம்ஜாய், பிஸ் வாநாத், கரிம்கஞ்ச், சோனிட்பூர், நாகான் உட்பட 29 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 488 கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது.

அசாம் மழை வெள்ள பாதிப்பில் இதுவரை 82 பேர் உயிரிழந்துள்ளனர். வெள்ளத்தால் 25 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். அசாம் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பிரதமர் நரேந்திர மோடி இன்று நேரில் சென்று பார்வையிட உள்ளார்.

இதேபோல் ராஜஸ்தான் மாநிலத்தின் பல மாவட்டங்களில் மழையால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி நேற்றுமுன்தினம் வரை 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, அசாம் மற்றும் ராஜஸ்தான் மாநிலத்தில் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத் தாருக்கு தலா 2 லட்சம் ரூபாயும், படுகாயம் அடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் நிவாரணமாக வழங்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார். (ப)

மக்கள் விரும்பும் அரசமைப்பு...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

100 வருடங்களாக அவர்கள் வாழ்ந்து வருகின்றபோதும் கூட அவர்களுக்குத் தாம் வாழும் காணிக்கான உறுதிகள் எவையும் இல்லை. மஹிந்த ராஜபக்ஷவின் ஊருக்குப் பக்கத்தில் உள்ள கிராமமான அங்குனு கொலபலஸ்ஸ என்ற கிராமத்தில் காணிப்பிரச்சினை இருக்கிறது. இது தவிர, அரசியல் கட்சிகளுக்கு வாக்குப் பெறக் கூடிய வகையில் தான் வீட்டுத் திட்டம் வழங்கப்படுகிறது. சமுர்த்தி உள்ளிட்ட பல வேலை வாய்ப்புக் கூட அரசியல்வாதிகளின் விருப்பத்துகு ஏற்றால் போல் வழங்கப்படுகின்றன. ஆகவே, மக்களது பிரச்சினை என்பது வடக்கில் மட்டுமல்ல. தெற்கிலும் உள்ளது. கிழக்கிலும் உள்ளது. ஆனால், இனப்பிரச்சினை என்ற விதத்தில் தமிழ் மக்கள் அதிகமாகவே பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

மக்களுக்கு இருக்க வேண்டிய பொருளாதாரம், சமூகம், அரசியல், கல்வி, கலாசாரம் சார்ந்த உரிமைகளை அரசியல்வாதிகள் தமது கைளுக்கு எடுத்துள்ளார்கள். அந்த நிலையை மாற்ற வேண்டும் என மக்கள் விரும்புகிறார்கள். அதனால் மக்கள் அவற்றை தமது அடிப்படை உரிமைகளாகக் கொண்டு வரவேண்டும் என்கிறார்கள்.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்க வேண்டும் என்பதே மக்கள் விருப்பமும்!

1977 ஆம் ஆண்டு ஜே.ஆர் ஜெயவர்த்தன ஆட்சிக்கு வந்த போது கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையால் தமிழ் மக்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள். ஜே.ஆர் காலம் தொடக்கம் தற்போது வரையும் அந்தப் பாதிப்பு தொடர்கிறது. தென் பகுதி மக்களும் தற்போது இந்த நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்ற விரும்புகிறார்கள். அம்பாந்தோட்டை துறைமுகம் காரணமாக மக்களது காணிகள், உமா ஓயா திட்டம் காரணமாக மக்களது காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளமையுடன், பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குள் இராணுவம் புகுந்து அவர்களது தொழிற்சங்க நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளது.

இந்த விவகாரங்களுக்குப் பின்னால் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஊழல், அதிகார துஷ்பிரயோகம், சிறுபான்மையினருக்கு எதிரான அடக்குமுறை, பாரபட்சம் என்பவற்றுக்கும் இந்த நிறைவேற்று அதிகாரத்தையே பயன்படுத்துகின்றனர். இதனால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என மக்கள் கோருகின்றார்கள்.

அரசமைப்பு கொண்டு வருவதற்கு முக்கிய காரணம் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு இருந்த பிரச்சினை. அது தற்போது யாருக்கும் ஞாபகம் இருப்பதாகத் தெரியவில்லை. தற்போது நடைமுறையில் உள்ளவாறான ஓர் அரசமைப்பு அல்லது ஒரு திருத்தம் தொடர்பிலும் பேசப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் எல்லா அரசியல் கட்சிகளும் பிரச்சினையைத் தீர்ப்பதில் கரிசனை காட்டுகின்றமையை விடுத்து தமது கட்சியை வளப்படுத்துவதில் கவனம் செலுத்தி வருகின்றன. வாக்கு வங்கியை அதிகரிக்கும் வகையிலான குடியேற்றங்களும், உள்ளூராட்சி வட்டார பிரிவு மாற்றங்களும் இடம் பெறுகின்றன.

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது தற்போதைய அரசமைப்பில் நடைமுறையில் இருக்கின்றது. அதனையே மீண்டும் கொண்டு வருவதற்கு முயற்சிகிறார்கள். இரண்டரை ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கும் இந்த அரசாங்கம் ஏற்கனவே இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை எவ்வாறு கையாண்டது? அதில் ஏதாவது நடைமுறைப்படுத்தப்பட்டதா...? என்ற கேள்வியும் எழாமல் இல்லை. ஆகவே, ஏற்கனவே அரசமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வர புதிய அரசமைப்பு கொண்டு வரப்படுமாக இருந்தால் அது வெறும் ஏமாற்று நடவடிக்கையே.

தமிழர் பிரச்சினை அரசுக்கு ஓர் அரசியல் விளையாட்டு

கடந்த இரண்டரை வருடமாகத் தமிழ் மக்களது பிரச்சினைகளைப் பயன்படுத்தி தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்ட அரசு, மாகாண சபைகளுக்கு அதிகாரம் கொடுப்பதற்கும், அதனை சிறப்பாக நடைமுறைப் படுத்தவும் முயலவில்லை. தமிழ் மக்களது பிரச்சினையை ஓர் அரசியல் விளையாட்டாகக் கருதிச் செயற்படுகின்றது.

அதனால் அதிகாரப் பகிர்வு உள்ள ஒரு தீர்வில் பொலிஸ், காணி அதிகாரம், நிர்வாகம், நிதி போன்ற முக்கிய விடயங்களை மீளப்பெற முடியாத வாறு புதிய அரசமைப்பு மூலம் பகிரப் படுதல் வேண்டும். மனிதவுரிமை சம்பந்தமாகவும் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு ஆயிரக்கணக்கில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவை சம்பந்தமாக எந்த விசாரணைகளும் நீதியாக இடம்பெறவில்லை என மக்கள் கருதுகின்றார்கள்.

மக்கள் மத்தியில் சுயாதீன ஆணைக் குழுக்கள் தொடர்பில் நம்பிக்கையில்லாத் தன்மை காணப்படுகிறது. புதிய அரசமைப்பில் சுயாதீன ஆணைக் குழுக்கள் இன்னும் வளப்படும் வகையில் அதற்குரிய அதிகாரங்கள், எல்லைகள் வரையறுக்கப்பட வேண்டும்.

தற்போது இருக்கும் தேர்தல் முறைமையில் இனவாதம், பணப் பயன்பாடு என்பன விருப்பு வெறுப்புக்களைக் கையாளும் தன்மையில் உள்ளன. அதேநேரம் இளைஞர்கள், யுவதிகள் நடைமுறை அரசமைப்பில் முன்னுக்கு வருவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகவுள்ளன. மக்களுடைய வாக்கைப் பெற்று மக்களை ஏமாற்றி விட்டு, அரசியல்வாதிகள் அதிகாரத்திற்கு வருகிறார்கள் என்ற எண்ணம் மக்களிடம் உள்ளது. இதனால் இந்த தேர்தல் முறை மாற்றப்படவேண்டும்.

அதில் பெண்கள், இளைஞர்களுக்கான விசேட இடம் ஒதுக்கப்பட வேண்டும். இதனைத்தான் வெளியில் கொண்டு வரவேண்டும் என மக்கள் விரும்பினார்கள். அதனால் கடந்த 24 ஆம் திகதி நாடாளுமன்றம் முன்னால் இளைஞர், யுவதிகள் திரண்டு புதிய அரசமைப்புத் தொடர்பிலும், அதன் உள்ளடக்கங்களை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மக்களின் விருப்பம்

புதிய அரசமைப்புத் தொடர்பில் உணமைத்தன்மையும், வெளிப்படைதன்மையும் இருக்க வேண்டும். மக்களிடம் அரசமைப்பு பற்றிக் கருத்துக்கள் பெற்றபோது மக்களுக்கு அதில் திருப்தி இல்லை. அது தொடர்பாக அறிக்கைகளைக் கையளித்த போதும், அதில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் குறித்து மக்களுக்கு எதுவும் தெரியாது.

வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகள், சமூக அமைப்புக்கள் என்பன ஒரு குழுவாகத் தென்பகுதிக்கு சென்று அரசியல் தொடர்பில் பேசக் கூடிய ஒரு நிலைக்கு வரவேண்டும். அவ்வாறு பேசுவதன் மூலம் அந்த மக்களின் ஆதரவைப் பெற்று ஓர் அரசமைப்பை கொண்டு வரமுடியும்.

புதிய அரசமைப்பு மாற்றம் 35 வருடங்களுக்குப் பிறகு வந்த நல்ல சந்தர்ப்பம். இதற்கு நாங்கள் முன்னுக்கு வரவில்லை என்றால் இந்த நாட்டில் இன்னும் பல தசாப்தங்களுக்கு இன, மத ரீதியாக தொடர்ந்தும் பாகுபாடுகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். அதனால் அன்புக்கும் நட்புக்குமான அமைப்பு தீவிரமாக மக்கள் மத்தியில் வேலை செய்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலை செய்து அந்த மக்களை முன்னுக்குக் கொண்டு நடவடிக்கை எடுத்துள்ளது. அதேபோன்று அரசியல்வாதிகள், பொது அமைப்புக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் முன் வருவதன் மூலமே மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்கள் விரும்பும் ஓர் அரசமைப்பை உருவாக்க முடியும். ★

அரசியல் நிர்ணய சபைத் தேர்தலுக்கு எதிர்ப்பு:

வெனிசுலாவில் எதிரணியினரின் போராட்டம் கலவரமாக வெடித்து 13 பேர் மரணம்!

கராகஸ், ஓக.01

வெனிசுலா நாட்டில் நடைபெற்ற அரசியல் நிர்ணய சபைத் தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, எதிர்க்கட்சிகள் மற்றும் பொதுமக்கள் நடத்திய போராட்டம் கலவரமாக மாறியது. இதில் 13 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு ஊடகங்கள் தகவல்கள் வெளியிட்டுள்ளன.

தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் புதிய அரசமைப்புச் சட்டத்தை இயற்றுவதற்காக ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ முடிவு செய்திருந்தார். ஆனால், ஜனாதிபதி நிக்கோலஸின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து , அந்த நாட்டு எதிர்க்கட்சிகள் மற்றும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் ஆகியோர் தொடர்ந்தும்

போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில், இதற்கான அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களை நியமிப்பதற்கான தேர்தல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிலையில், தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடைபெற்ற போராட்டம் கலவரமாக மாறியது. இதில், போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்காக பாதுகாப்பு படையினர் அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அரசியல் நிர்ணய சபையை எதிர்த்து கடந்த ஏப்ரல் மாதம் முதல் நடைபெற்று வந்த போராட்டத்தில் இதுவரை 121

பேர் வரை உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

கொலம்பியா சுரங்கத்தில் விபத்து; அதிகாரிகள் 6 பேர் சாவு!

கொலம்பியாவின் அண்டி யோகியியா மாகாணத்தில் சட்ட விரோதமாக இயங்கி வந்த தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி, சோதனையிடச் சென்ற அதிகாரிகள் 6 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தங்கச் சுரங்கம் சில காலமாக மூடப்பட்டிருந்தது. மூடப்பட்ட இந்தச் சுரங்கத்துக்கு அதன் ஒப்பந்த நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அவ்வப்போது சென்று சோதனை நடத்தச் செல்வது வழக்கம்.

அந்த வகையில், நேற்று முன்தினம் ஏழு அதிகாரிகள் அந்த சுரங்கத்துக்குச் சென்றனர். அப்போது, அந்த இடத்தில் குண்டு வெடித்துச் சிதறியது. இதன்போதே அவர்கள் உயிரிழந்தனர்.

பாலூட்டும் படத்தை வெளியிட்டு பெரும் சர்ச்சையை கிளப்பினார் கிர்கிஸ்தான் ஜனாதிபதி மகள்

உள்ளாடைகள் மட்டுமே அணிந்துகொண்டு குழந்தைக்கு பாலூட்டும் புகைப்படத்தை வெளியிட்டு சர்ச்சையை கிளப்பியுள்ளார் கிர்கிஸ்தான் ஜனாதிபதியின் இளைய மகள்.

கிர்கிஸ்தான் ஜனாதிபதியின் இளைய மகள் அலியாஷகீயேவாவெளியிட்ட அந்தப் புகைப் படம், குழந்தைகளுக்கு பாலூட்டுதல் மற்றும் பாலியல் ஆகியவற்றைப் பற்றிய விவாதத்தைத் தூண்டியுள்ளன.

இதனிடையே தனது புகைப்படத்துக்கு எதிராக எழுந்த சர்ச்சைகளை அடுத்து அலியா ஷகீயேவா அந்தப் புகைப் படத்தை நீக்கியுள்ளார்.

அலியா ஷகீயேவா இந்தப் புகைப்படத்தை சமூக வலைதளமான 'இன்ஸ்டாகிராமில்' பதிவேற்றம் செய்து, ''என் குழந்தைக்கு எங்கெல்லாம் எப்போதெல்லாம் தேவைப்படுகிறதோ, அப்போதெல்லாம் நான் பாலூட்டுவேன்'' என்னும் வாசகத்துடன் வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் அலியா பேசுகையில்-

"பெண்ணின் உடலை அதீதமாகப் பாலியல் தன்மையுடன் சித்திரிக்கும் கலாசாரத்தின் விளைவே இந்தப் பிரச்சினைக்குக் காரணம். எனக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த உடல் கொச்சையானதல்ல.

''இதன் நோக்கம் என் குழந்தையில் உடலியல் தேவைகளைப் பூர்த்தி செய்வது. இது போகப் பொருளல்ல ''- என்றார். (ச)

அமெரிக்காவின் மான்ஹட்டன் நகரில் உள்ள கட்டடங்களைக் குறிக்கும் வகையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வரைந்த இந்த ஓவியம், 18 லட்சம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது.

காபூலில் உள்ள ஈராக் தூதரகம் மீது நேற்று தற்கொலைத் தாக்குதல்!

காபூல், ஓக. 01

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அமைந்துள்ள ஈராக் நாட்டு தூதரகத்தின் மீது இடம் பெற்ற தற்கொலைப்படைத் தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் உரிமை கோரினர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் நகரின் மையப்பகுதியில் ஈராக் நாட்டின் தூதரகக் கட்டடம் உள்ளது. உள்ளூர் நேரப்படி நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் இந்தக் கட்டடத்தின் வாசலில் வைத்து, தீவிரவாதி ஒருவன் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்க வைத்தான். அதனைத் தொடர்ந்து தீவிரவாதிகள் மூவர் கட்டடத்தின் உள்ளே நுழைந்தனர்.

இந்த நிலையில், தூதரக வளாகத்துக்குள் மறைந்திருக்கும் தீவிரவாதிகளுக்கும், ஆப்கானிஸ்தான் நாட்டு பாதுகாப்பு படையினருக்கும் இடையில் கடுமையான துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருகிறது என அந்த

ஐ.எஸ். தீவிரவாதிகள் உரிமை கோரினர்

நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, காபூல் நகரின் சில பகுதிகளிலும் தற்கொலைப் படைத்தாக்குதல்களும், துப்பாக்கி சண்டையும் நடைபெற்றன என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த மனித குண்டு வெடி குண்டுத் தாக்குதலின்போது

எழுந்த புகை மூட்டத்தை அந்த நாட்டு தொலைக்காட்சிகள் முழுமையாக ஒளிபரப்பி வருகின்றன.

இந்தத் தாக்குதலின் சேத விவரங்கள் தொடர்பில் தகவல்கள் வெளியாகவில்லை. (ச)

அமெ.தூதரக அதிகாரிகள் 755 பேரை ரஷ்யாவில் இருந்து வெளியேற உத்தரவு!

ஜனாதிபதி புடின் அதிரடி

ரஷ்யாவில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் 755 பேர் உடனே நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என அந்த நாட்டின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் நலனுக்கு எதிராகச் செயற்படல், அமெரிக்காவையும், அதன் நட்பு நாடுகளையும் பலவீனப்படுத்துதல் போன்ற குற்றச்சாட்டுகளை ரஷ்யா, ஈரான், வடகொரியா ஆகிய 3 நாடுகள் மீதும் அமெரிக்கா முன்வைத்தது.

குறிப்பாக அமெரிக்காவில் கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில், ரஷ்யா நேரடியாகத் தலையிட்டது என்றும், உக்ரைன், சிரியா ஆகிய நாடுகளை ரஷ்யா தனது இராணுவத்தின் மூலம் ஆக்கிரமிப்பு செய்தது எனக் கூறியும் அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைவிதிக்கவேண்டும்என்றகோரிக்கைஎழுந்தது. அதன்படி, மேற்கண்ட நாடுகள் மீதான பொருளாதார தடையை விதிப்பதற்கான பிரேரணை அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இத்தகைய நடவடிக்கைகளால் கோபமடைந்துள்ள ரஷ்யா, இதற்குத் தக்க பதிலடி கொடுக்கும் விதமாக சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்தநிலையிலேயே ஜனாதிபதி புடின் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

ரஷ்யாவில் சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் தற்போது பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

காலைக்கதிர் Kalaikkathir

தேசிய ரீதியிலான சாதனை வீரர்களுக்கு வவுனியாவில் சிறப்பான வரவேற்பு!

வவுனியா, ஓக. 01

இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய மட்ட உதைபந்தாட்ட போட்டியில் வவுனியாவின் 786 இளைஞர் கழகம் மூன்றாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய மட்ட 2017 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளின் உதைபந்தாட்ட தேசிய மட்ட போட்டிகள் கடந்த 27 ஆம் திகதி முதல் பதுளை மாவட்டத்தில் நடைபெற்றது.

இவ் ஆண்டுக்கான தேசிய உதைபந்தாட்ட போட்டிக்கு வவுனியாவில் இருந்து, வவுனியா பிரதேச மட்டம் மற்றும் மாவட்ட மட்டத்தில் தனது திறமையை வெளிப்படுத்திய 786 இளைஞர் கழகம் தேசிய மட்டத்தில் பல மாவட்ட அணிகளை வீழ்த்தி இவ் ஆண்டு மூன்றாம் இடத்தைத் தனதாக்கியுள்ளது.

இவர்களுக்கான மாபெரும் வரவேற்பு நிகழ்வு கிராம மக்களின் ஒழுங்கமைப்பில் வெகு சிறப்பாக வவுனியா பட்டாணிச்சூர் கிராமத்தில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.



இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், முன்னாள் நகர சபை உறுப்பினர் பாரி, முன்னாள் கிராம சேவகர் நசார், சமூக ஆர்வலர் ஆரிப், இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஐ.சுகானி, இளைஞர் கழக சம்மேளன தலைவர் சு.காண்டீபன், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ.கேசவன், முன்னாள் மாவட்ட சம்மேளனத் தலைவர் தே.அமுதராஜ், உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் எ.ஜோன்சன் மற்றும் வைத்தியர் அனஸ் உட்பட நூற்றுக்கணக்கான கிராம மக்களின் பங்களிப்புடன் தேசிய வெற்றி வீரர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-100)

ஒரே இரவில் 3 தங்கம்!

அமெரிக்க வீரர் உலக சாதனை



ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரில் நடந்து வந்த உலக நீச்சல் சம்பியன்ஷிப் போட்டி நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தது.

இதில் அமெரிக்க நீச்சல் வீரர் காலெப் டிரஸ்செல் நேற்று முன்தினம் இரவில் 50 மீற்றர் பிரீஸ்டைல், 100 மீற்றர் பட்டர்பிளை, 4 x 100 மீற்றர் பிரீஸ்டைல் கலப்பு பிரிவு ஆகிய பந்தயங்களில் அடுத்தடுத்து பங்கேற்று மூன்றிலும் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

இரண்டு மணி நேரத்தில் மூன்று போட்டிகளிலும் மின்னல் வேகத்தில் நீந்தி வியப்பூட்டிய 20 வயதான டிரஸ்செல் இதன்மூலம் உலக நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் ஒரே இரவில் 3 தங்கப் பதக்கம் வென்ற முதல் வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். ஏற்கனவே 100 மீற்றர் பிரீஸ்டைல், 4 x 100 மீற்றர் மெட்லே கலப்பு, 4 x 100 மீற்றர் பிரீஸ்டைல் ஆகிய பிரிவுகளிலும் அவர் தங்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

அதியுச்ச விளையாட்டு பயிற்சிக்கூடத்துக்கான ஒப்பந்தம் கைச்சாத்து

நுவரெலியாவில் அதியுச்ச தொழில்நுட்பத்துடன் கூடிய விளையாட்டு பயிற்சிக்கூடக் கட்டடத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை Ellipse project SAS நிறுவனத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை கைச்சாத்திட்டது விளையாட்டுத்துறை அமைச்சு.

நுவரெலியாவில் 34.5 ஹெக்டேயர் பரப்பளவிலேயே இந்த அதியுச்ச தொழில்நுட்பத்துடன் கூடிய பயிற்சிக்கூடம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான வர்த்தக உடன்படிக்கையில் பிரான்ஸ் நிறுவனமான ''எலிப்ஸ் புரஜக்ட் எஸ்.ஏ.எஸ்.'' உடன் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தலைமையில் அமைச்சின் செயலாளர் கையெழுத்திட்டார்.

இந்தப் பயிற்சிக்கூடத்தில் சர்வதேச தரத்திலான ஓடுபாதைகள் மற்றும் அனைத்து விதமான பயிற்சிக் கூடங்களும் அமைக்கப்படவுள்ளன.

அத்தோடு இலங்கை வீரர்கள் தரம் மிக்க பயிற்சிக் கூடங்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லத் தேவையில்லை என்றும், இதன்மூலம் இலங்கையின் விளையாட்டுத்துறையும் மேம்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன் மொத்தச் செலவு 1,290 கோடி பில்லியன் ரூபா என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற அதியுச்ச பயிற்சிக்கூடங்கள் கடல் மட்டத்திலிருந்து 1,500 மீற்றரிலிருந்து 3,500 மீற்றருக்குள் இருக்க வேண்டும்.

இலங்கையில் அமைக்கப்படவுள்ள குறித்த பயிற்சிக் கூடம் கடல் மட்டத்திலிருந்து 1,895 மீற்றர் உயரம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப)

உதைபந்தாட்ட மைதானத்தில் நெரிசலில் சிக்கி 2 பேர் சாவு!

ஜோகனஸ்பேர்க், ஓக. 01

தென்னாபிரிக்காவின் நஸ்ரெக் பகுதியில் அமைந்துள்ளது எவ்.என்.பி. மைதானம். கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பீபா உதைபந்து உலகக் கோப்பையின் இறுதிப்போட்டி இந்த மைதானத்தில்தான் நடைபெற்றது.

இந்நிலையில், இந்த மைதானத்தில் தென்னாபிரிக்காவின் பிரபலமான இரு உள்ளூர் உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றிய போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்போட்டிக்கான டிக்கெட்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னரே விற்றுத் தீர்ந்துவிட்டன. இதனால், போட்டியைக் காண ஏராளமான மக்கள் மைதானத்துக்கு வந்தனர்.

அதிகமான மக்கள் மைதானத்துக்கு அனுமதிக்கப்பட்டமையின் காரணமாகக் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்த கூட்ட நெரிசலில் சிக்கி இரண்டு பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உதைபந்தாட்டத்தைக் கண்டுகளிக்கவந்த இடத்தில் இருவர் பலியாகியுள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு முறையும் இந்த இரு அணிகள் மோதும் போதும் மைதானத்தில் கூட்டம் அலைமோதுவதும், அதனால் கூட்ட நெரிசல் ஏற்பட்டு விபத்து ஏற்படுவதும் தொடர்கதையாகி வருகிறது.

இதற்கு முன்னதாக கடந்த 2001 ஆம் ஆண்டு இதே அணிகள் விளையாடிய போட்டியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 43 பேர் பலியாகியுள்ளனர். அதேபோல், 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 42 பேர் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை பலம் வாய்ந்த அணி கிடையாது: சௌரவ் கங்குலி பேட்டி

இலங்கை பலம் வாய்ந்த டெஸ்ட் அணியாக தற்போது இல்லை என இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரக் கங்குலி தெரிவித்துள்ளார். இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வரும் இந்திய கிரிக்கெட் அணி முதல் டெஸ்ட் போட்டியில் அபார வெற்றி பெற்றது.

இது குறித்து இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி அளித்துள்ள பேட்டியில், துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு என இந்திய அணி எல்லாவற்றிலும் வலுவாக உள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக வெளிநாடுகளில் இந்திய அணி சிறப்பாக விளையாடி வருகிறது. விராட் கோஹ்லி தலைமையை சோதித்துப் பார்க்கும் போட்டிகள் இன்னும் வரவில்லை எனக் கங்குலி கூறியுள்ளார். இலங்கை அணியில் கவலைக்குரிய அம்சங்கள் அதிகம் உள்ளன என கூறிய கங்குலி, இன்றைய நிலைமையில் இலங்கை பலம் வாய்ந்த டெஸ்ட் அணியாக இல்லை எனவும் தெரிவித்துள்ளார். (ப)

தீர்வு முயற்சியை முறியடிக்கவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை, திக்கம் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு நிகழ்வில் கலந்துகொண்டு தற்போதைய தீர்வு முயற்சிகள் குறித்து விளக்கமளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு ஆற்றிய உரையின் முழு விவரம் வருமாறு:-

தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எங்களுடையமக்களுடைய அடிப்படை அபிலாஷைகளை நிறைவு செய்யும் தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்வோம், அதற்காக உழைப்போம் என்று மக்கள் முன் உறுதி கூறினோம். மக்கள் பெருவாரியாக எங்களுக்கு வாக்களித்தார்கள்.

மக்கள் நிராகரிப்பு

மாற்றுச் சிந்தனைகளை, மாற்றுக் கொள்கைகளை முன்வைத்தவர்களை மக்கள் முற்றும் முழுதாக நிராகரித்திருக்கின்றார்கள். அப்படிச் செய்தமை மூலம் மக்கள் எம் மீது சுமத்தியிருக்கும் பொறுப்பு மிகப் பெரியது.

எங்களை விடத் தீவிர நிலைப்பாடு எடுத்தவர்களில் ஒருவரையாவது தெரிவு செய்து அத்துடன் எம்மையும் சேர்த்து அனுப்பிருந்தால் அது வித்தியாசமானது. ஆனால் மக்கள் அப்படிச் செய்யவில்லை.

வடக்கு, கிழக்கிலிருந்து மக்கள் தெரிவு செய்து அனுப்பிய 18 தமிழ் உறுப்பினர்களுள் 16 பேர் தமிழ்க்கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள். மற்ற இருவரும் எங்களை விடத் தீவிரமான நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் அல்லர்.

அந்த இருவரில் ஒருவர் இணக்க அரசியல் என்று கூறிக்கொண்டு, அதில் அல்ல, மண்டியிட்ட அரசியலில் போய் வீழ்ந்து கிடக்கின்றவர். மற்றவர் ஒரு தேசியக் கட்சியின் உறுப்பினர்.

எங்களுக்கு மாற்று - வழியாக மாற்று சிந்தனையாக - மாற்றுக் கொள்கையாக - நாங்கள் எடுத்த நிலைப்பாட்டுக்கு, தீவிரமான நிலைப்பாட்டுக்கு மக்கள் வாக்களிக்கவில்லை. மாறாக, சற்றுக்குறைவானதற்காகத்தான் வாக்களித்தார்கள்.

நாங்கள் அவற்றையெல்லாம் கவனிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

எமது நிலைப்பாடு

தேர்தல் அறிக்கையில் அரசியல் தீர்வு தொடர்பாக எமது மக்களின் முன்னால் நாம் வைத்த தெளிவான நிலைப்பாடு என்ன?

தனிநாடு பெற்றுத் தருவோம் என்று சொன்னோமா? இல்லை.

தெட்டத் தெளிவாக - பிரிக்கப்படாத - பிளவுபடாத - ஒரு நாட்டுக்குள்ளே பூரண அதிகாரப் பகிர்வு முறை ஒன்றை - சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு முறை ஒன்றை - இணைந்தவடக்கு, கிழக்கிலே ஏற்படுத்துவோம் என்பது எங்களின் நிலைப்பாடு.

இது இன்று, நேற்று ஏற்பட்ட நிலைப்பாடு அல்ல.

1949 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவானபோது உருவாகிய கொள்கை. 1952 ஆம் ஆண்டுத் தேர்தலில் (எமது மக்கள்) ஏற்றுக்கொள்ளாத ஒரு கொள்கை. ஆனால் 1956 முதல் தொடர்ச்சியாக எமது மக்கள் வாக்களித்த கொள்கை. இடையிலே 1977 இலே தனிநாட்டுக்காகவும் மக்கள் வாக்களித்தார்கள்.

ஆனால் 1989 ஆம் ஆண்டிலேயிருந்து, தனிநாட்டுக் கோரிக்கையை நாம் கைவிட்டு விட்டோம் என்ற அறிவிப்போடுதான் எமது பிரதிநிதிகள் திரும்பவும் நாடாளுமன்றத்துக்குள் காலடி எடுத்து வைத்தார்கள்.

ஒரு நாட்டுக்குள் தீர்வு: புலிகளும் முயன்றனர்

ஒரு நாட்டுக்குள் தீர்வைக் காணலாம். ஒரு நாட்டுக்குள் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபடலாம் என்பதைத் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏற்றிருந்தார்கள். யுத்த நிறுத்த ஒப்பந்தங்கள் செய்திருந்தார்கள். பல மட்டங்களிலே பேச்சுக்கள் நடத்தினார்கள்.

அந்தப் பேச்சுக்கள் நாட்டை எப்படிப் பிரிப்பது, எல்லைக் கோடுகளை எங்கோ போடுவது என்ற அடிப்படையில் அமைந்தவை அல்ல. ஒரு நாட்டுக்குள் எப்படி அதிகாரப் பகிர்வைச் செய்வது என்ற பேச்சுக்களில்தான் புலிகளும் ஈடுபட்டிருந்தார்கள்.

ஆகையினால் அந்த விடயம் குறித்து எமது மக்களிடம் எந்தவிதமான சலனமும் கிடையாது. எந்தவிதமான குழப்பமும் கிடையாது.

ஆகவே, ஒரு நாட்டுக்குள் தான் தீர்வு என்பது நாம் திடமாகச் சொன்ன அறிக்கை; நிலைப்பாடு; கூற்று. - அதை மக்கள் முற்று முழுதாக ஆதரித்திருக்கின்றார்கள்.

அதை நான் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டிக் கூறுவதற்கும் காரணம் உண்டு. அப்படி ஒன்றை வார்த்தையில் கூறிக்கொள்ளாமல் சிலர் அவ்வாறு மாயையில் பிரசாரத்தை முன்னெடுக்கின்றார்களா? இல்லையா?

(அவர்கள்) உபயோகிக்கும் வார்த்தைகள், சொற்பதங்கள் அப்படி ஒரு பிரமையை மக்கள் மத்தியில் உருவாக்குகின்றன. அதனை வைத்து ஒரு பிரசாரம் நடக்கின்றது.

ஆனால், நாங்கள் மிகவும் உண்மைத்துவமாக மக்கள் முன் சொன்னவற்றை மீண்டும் தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.

இதை அரசுடன் நடத்தும் பேச்சுக்களிலேயே தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.

பிரிவினையை நாம் கோரவில்லை

நாட்டைப் பிரிக்குமாறு நாங்கள் கேட்கவில்லை. அதை இப்போதும் கூறுகிறோம். இனி மேல் உரக்கவும் கூறப்போகிறோம். வரப்போகின்ற நாள்களிலே இன்னும் கூடுதலாக உரத்துச் சொல்லப்போகிறோம்.

அப்படி நாங்கள் சொல்கின்ற போது நீங்கள் சஞ்சலப்படக் கூடாது. ஏன் இப்படிக் கூறுகின்றார்கள் என்று நீங்கள் கருதவும் கூடாது. அதுதான் எமது நிலைப்பாடு.

அதிகாரத்தைப் பிரியுங்கள்!

நாங்கள் சிங்கள மக்கள் மத்தியில் சென்று அதனை உரத்துச் சொல்லப்போகின்றோம். நாட்டைப் பிரிக்கும் படி நாங்கள் கேட்கவில்லை என்பதை உரத்துச் சொல்லப் போகின்றோம்.

ஏன் அப்படி அங்கு போய்க் கூற வேண்டும்? நாட்டைப் பிரித்துக் கொடுக்கும்படி நாங்கள் கேட்கவில்லை. ஆனால் அதிகாரங்களை அர்த்தமுள்ள வகையில் பிரித்துக்கொடுங்கள் என்று நாம் அவர்களிடம் சொல்லப் போகின்றோம்.

'நாட்டைப் பிரிக்க வேண்டாம்'; அதிகாரங்களைப் பிரியுங்கள்!' - இதற்கு சிங்களத்தில் அழகான, நல்ல சொற்றொடர் உண்டு அதை அவர்களிடம் போய் உரத்துக் கூறப் போகின்றோம்.

அப்படிச் சொல்லும்போது தான் அந்த அதிகாரப் பகிர்வு எத்தகைய முறையில் அர்த்த முள்ளதாக அமையலாம் என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்வோம்; இடித்துச் சொல்வோம்.

'சமஷ்டி' எண்ணம் சிங்களவர்களுடையது

'சமஷ்டி' முறை என்ற எண்ணத்தோடு - எண்ணக் கருவோடு - எங்களிடம் இருந்து உருவான ஒன்றல்லவே! 1926 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா முன்வைத்த கூற்று. அதுவும் தெற்கில் கூறவில்லை. தமது கொள்கையைப் பரப்புவதற்காகத் வடக்கில் வந்து பேருரையாற்றிய போது கூறியிருக்கின்றார்.

'Ceylon Morning Leader' என்ற பத்திரிகைக்கு சமஷ்டி முறை பற்றி ஐந்து கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். அதிலும் தமது இறுதிக் கட்டுரையில் சுவிட்சர்லாந்தில் இருப்பது போன்ற சமஷ்டி முறை இருக்க வேண்டும் என எழுதியிருக்கின்றார். சமஷ்டி முறையிலேயே ஆகக்கூடிய அதிகாரப் பகிர்வு முறைமை சுவிஸில்தான் இருக்கின்றது.

ஆகவே, அது அவருடைய கொள்கை, அது மட்டுமல்ல. டொனமூர் ஆணைக்குழு வந்த போதும், சோல்பரி ஆணைக் குழு வந்த போதும் கண்டியப் பிரதிநிதிகள் சமஷ் முறையைத் தான் கேட்டார்கள்.

சமஷ்டி ஆட்சி வேண்டும். எப்படி (இங்கு) மூன்று இராச தானிகள் இருந்தனவோ அப்படி மூன்று சமஷ்டி அலகுகள் இருக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்த வர்கள் கண்டியத் தலைவர்கள்.

ஆகவே நாங்கள் சிங்கள மக்களிடம் சென்று இதனைக் கூற முடியும்.

'இது உங்களுடைய சிந்தனை. இது உங்களுடைய தலைவர்களின் கொள்கை' - என்று சொல்வோம்.

துரதிஷ்டவசமாக அந்த வேளையில் நாம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. நாங்களும் அதனைக் கேட்டிருந்தால் அது அன்றே கிடைத்திருக்கும்.

சமஷ்டி என்றால் நாடு பிளவுபட்டு விடும் என்ற கூற்று தவறானது என்பதை நிரூபிப்பதற்காக இவற்றை நாம் அவர்களுக்குப் போய் எடுத்துரைத்து நிரூபிப்போம்.

இது உங்களிடமிருந்து எழுந்த யோசனை. உங்கள் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட கொள்கை. அது எப்படி உங்களுக்கு மாறானதாக இருக்க முடியும் என்பதை நாங்கள் அவர்களிடம் சொல்வோம்.

மாகாணங்களை அலகாக ஏற்றோம்

இந்த முறைமை மாகாணங்களை அலகாகக் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய ஒன்று.

இன்று இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு முப்பது வருடங்களும் ஒரு நாளும்.

அதிலேதான் முதற் தடவையாக மாகாணம் ஒரு அலகாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது வரை மாகாணங்களும் அலகாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மாவட்டத்தை விட்டு விலக அவர்கள் மறுத்திருந்தார்கள்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் தான் தற்காலிகமாகவேனும் - வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்ட 19 வருடங்கள் இணைந்த வட, கிழக்காக இருந்தது.

ஆகவே, மாகாணம் அடிப்படை அலகு என்பதை நாம் வற்புறுத்தியிருக்கின்றோம். அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அதில் எந்தச் சர்ச்சையும் இல்லை.

சர்வஜன வாக்கெடுப்பு இப்போது நடத்தலாமா?

கிழக்கு மக்கள் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் இணங்கினால் மட்டுமே தற்காலிக இணைப்பு நிரந்தரமாகும் என்பதும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் உள்ள விடயம்.

ஆனால், அந்த சர்வஜன வாக்கெடுப்பை இப்போது நடத்தும்படி நாம் கேட்க மாட்டோம். கிழக்கில் அத்தகைய சர்வஜன வாக்கெடுப்பு இப்போது நடத்தப்பட்டால் என்ன முடிவு வரும் என்பது எமக்குத் தெரியும். உங்களுக்கும் தெரியும்.

இணைப்பை விரும்புகின்றவர்கள் அதை இந்த வேளையில் கேட்கமாட்டார்கள். அதற்கு இன்னும் சில காலம் செல்ல வேண்டும். அதற்கான சூழ்நிலை உருவாக வேண்டும். கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களும் தாங்கள் தமிழ் மக்களோடு சேர்ந்திருப்பது தங்களுக்கும் சாதகமானது என்ற நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். அப்படி வருகின்றபோது அது சாத்தியமாகும். அதுவரை நாம் பொறுமை பேண வேண்டும்.

முஸ்லிம் மக்களோடு நல்லுறவு அவசியம்

அது மட்டுமல்ல, முஸ்லிம் மக்களும் எங்களோடு சேர்ந்தால் அவர்களுக்கு நல்லது என அவர்கள் நினைக்கக்கூடிய வகையில் நாம் அவர்களோடு சேர்ந்து வாழவேண்டும். வடக்கு - கிழக்கு இணைப்பு வரவேண்டும் என்று உண்மையாக விரும்புபவர்கள் அதைத் தான் செய்வார்கள். வெறும் கோஷத்துக்காகச் சொல்பவர்களுக்கு அது ஏற்பட வேண்டும் என்ற உண்மையான எண்ணம் கிடையாது.

பொறுப்பு இல்லாவிட்டால் எதுவும் பேசுவதா? அது வெறும் கோஷம் மட்டும்தான். அது இலக்கை அடைவதற்கான ஒரு வழிமுறை அல்ல. அது வெற்றுக்கோஷம். வெற்றுக்கோஷம் எமக்கு வேண்டியதல்ல. எமக்கு வேண்டியது இணைந்த வடக்கு - கிழக்கு உண்மையிலேயே ஓர் இணைந்து ஆட்சி முறை.

அதை அடைவதாக இருந்தால், அடைவதற்கான பாதையைச் சரி செய்து கொள்ள வேண்டும். அது கிடைக்கக் கூடிய வகையிலே நடந்து கொள்ள வேண்டும். அதற்கான வழிமுறைகளை நாம் இப்போதே ஏற்படுத்தி வைக்க வேண்டும்.

ஜனாதிபதி கூறியவை

புதிய அரசமைப்பை உருவாக்குவாற்காக 2016 ஜனவரி 9 இல் நாடாளுமன்றில் ஒரு பிரேரணை முன்வைக்கப்பட்டது. அது மார்ச் 9 இல் நிறைவேற்றப்பட்டது.

அந்தப் பிரேரணை முன் வைக்கப்பட்டபோது அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில முக்கிய கருத்துக்களை முன் வைத்தார். அவை:-

ஒன்று - குறித்த இடத்துக்கோ குறித்த சமயத்துக்கோ முதலிடம் கொடுக்க முடியாது.

அடுத்து - தெற்கிலே சமஷ்டி என்று சொன்னால் மக்களுக்குப் பயம் பிடிக்கின்றது. வடக்கில் ஒற்றையாட்சி என்று சொன்னால் அந்த மக்களுக்கும் பயம் பிடிக்கின்றது. ஒரு நாட்டின் அரசமைப்பு என்றால் அது அந்த நாட்டின் மக்களைப் பயப்படுத்துவதாக இருக்கக் கூடாது என்றார் அவர்.

ஆகவே, நாம் ஒரு நவீன அரசமைப்புச் சட்டத்தை வரையவேண்டும் என்றும் அவர் சொன்னார்.

இடைக்கால அறிக்கை நிச்சயம் வெளிவரும்

இது அவர் கூறியவை. இந்த அடிப்படையில்தான் புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. இது வரை வழி நடத்தும் குழு 67 தடவைகள் கூடியுள்ளது. இடைக்கால அறிக்கைஎப்போதே தயாராகிவிட்டது. ஆனால், இப்போதும் மெருகூட்டப்பட்டு வருகின்றது.

சில, சில காரணங்களுக்காக, கட்சி அரசியல் காரணமாக, அது வெளிவராமல் இருக்கின்றது.

ஆனால், அது வெளிவர வேண்டும். இரண்டு வருட காலம் கடந்து, ஒன்றரை வருட காலம் 67 அமர்வுகள் நடந்த பிறகு, அது வெளிவராமல் போய்விட முடியாது. வெளிவர வேண்டும். வெளிவரும்.

அது வெளிவருகின்றபோது இந்த இரண்டு வருட காலமும், நாங்கள் அனுப்பிய பிரதிநிதிகள் எதைச் செய்தார்கள் என்ற கேள்விக்கு அதில் பதில் இருக்கும்.

எல்லாம் ஒளிப்பதிவில் விரைவில் வெளிவரும்

இந்தத் தடவை அந்த இடைக்கால அறிக்கை மட்டுமல்ல, ஒவ்வொரு கூட்ட அறிக்கை மட்டுமல்ல, அந்தக் கூட்டங்கள் அனைத்தும் ஒளிப்பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன, அந்தப் பிரேரணையின்படி இந்த விடயம் முடிவடைகின்றபோது, அவை அனைத்தும் பகிரங்கமாக வெளியிடப்படும், இணையத் தளத்தில் வெளிவரும்.

ஒவ்வொரு கூட்டத்திலும் சம்பந்தர் ஐயாவோ, நானோ எதைக் கூறினோம் என்பதையெல்லாம் ஒளிப்பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

எங்களுக்கு எங்கள் மக்கள் தந்த ஆணையிலிருந்து நாம் இம்மியளவும் விலகவில்லை.

எப்படியான அடிப்படையில் - கொள்கையில் - இந்தப் புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக வேண்டும் என்று எங்கள் மக்கள் எங்களுக்கு ஆணை கொடுத்திருக்கின்றார்களோ நாம் அதிலிருந்து ஓர் அங்குலம் கூட நகரவில்லை. இதை நான் திடமாக உங்களிடத்தே கூறலாம்.

ஆனால், சில விடயங்களை, அவை வெளியாவதற்கு முன்னரே கூறுவதால் சில பின்விளைவுகள் ஏற்படும்.

இன்று தென்னிலங்கையில் பாரிய பிரசாரம் நடந்து கொண்டிருப்பதை நீங்கள் கவனிக்காமல் இருக்க முடியாது. மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அணியினரும் இன்று பேசுகின்றமை அனைத்தும் இங்குப் பத்திரிகையில் வெளிவருகின்றன.

புதிய அரசமைப்பு ஊடாக நாட்டை இரண்டாகப் பிளக்கின்றார்கள் என்கிறார் அவர். பல தடவைகள் அவர் கூறிவிட்டார்.

இங்கேயிருக்கின்ற சிலரோ தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எல்லாக் கொள்கைகளையும் கோட்டைவிட்டு விட்டார்கள் என்று கூறுகின்றனர். ஒற்றையாட்சிக்கு இணங்கிவிட்டார்கள் என்றும் கூறுகின்றார்கள்.

(18 ஆம் பக்கம் பார்க்)

காலைக்கதிர் Kalaikkathir

தீர்வு முயற்சியை...

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் - இரு தரப்பினரும் - நேரெதிரான கருத்துக்களைச் சொன்னாலும் கூட இரு தரப்பினரதும் நோக்கமும் என்ன? புதிய அரசமைப்புச் சட்டத்தைத் தோற்கடிக்க வேண்டும் என்பதுதான் அது.

இன்றைக்கு யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற சில விடயங்களைப் பார்க்கின்ற போது - ஓரிரு மணித்தியாலத்துக்குமுன்னர் கொக்குவில் பகுதியில் பத்துப் பேர் கொண்ட குழு இரு பொலிஸாரை வாளினால் வெட்டியிருக்கின்றது. ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. பொலிஸாரைக் குறிவைத்து வாளால் வெட்டியிருக்கின்றார்கள். ஏன் இது நடக்கின்றது?

ஏதோ ஒரு திட்டம்

அண்மைக் காலமாக இத்தகைய பிரச்சினைகள் துரிதமடைந்துள்ளன.

நல்லூரில் நடந்த சூட்டுச் சம்பவத்துக்குப் பின்னர் நான் வெளியிட்ட அறிக்கையிலே ஒரு விடயத்தை வெளியிட்டிருக்கின்றேன். யாழ்ப்பாணத்தில் நடந்து கொண்டிருக்கின்ற வன்முறைகள் இன்னொரு நிலைக்குவந்துவிட்டவையாக எங்களுக்குத் தெரிகின்றன.

ஏதோ ஒரு திட்டம் இருப்பதாக உங்களுக்குத் தெரியவில்லையா? மஹிந்த ராஜபக்ஷ உடனடியாக என்ன கூறுகின்றார்?

விடுதலைப் புலிகளின் ஆரம்ப காலம் எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றது என்கிறார்.

இங்கே சில பேரைக் கொண்டு சில வேலைகளைச் செய்துவிட்டு, அவர் அங்கிருந்துகொண்டு வியாக்கியானம் கொடுத்திருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் இன்று வீதியில் போகின்ற இரு பொலிஸாரைப் பத்துப்பேர் கொண்ட குழு ஒன்று தேடிப்போய் வெட்டுவதற்கு என்ன தேவை இருக்கின்றது?

வேண்டுமென்றே ஒரு குழப்பத்தை இங்குமட்டுமல்ல தெற்கிலும் ஏற்படுத்துவதைத் தவிர வேறு இதற்கு தேவை இருக்கின்றதா? நீங்களே யோசித்துப் பார்க்கின்றீர்களா?

சீருடைப் பொலிஸாரை தேடிப் போய் வெட்டுவதா?

வீட்டுக்குள் புகுந்து கொள்ளையடிக்கின்றார்கள், பெண்ணின் காதணியை வெட்டிச் செல்கின்றார்கள். சரி. அது, கொள்ளையிடும் நோக்கில் நடக்கின்றது.

ஆனால், சீருடையில் போகும் பொலிஸ்காரரை ஏன் தேடிப்போய் வெட்ட வேண்டும்?

நாங்கள் இந்த வேளையில் விழிப்படையாமல் இருந்தால் தெற்கிலே இனவாததத்தைக் கக்குகின்ற குழுக்களோடு சேர்ந்து இயங்குகின்றன - எங்களைவிட இங்குதங்களைத் தீவிரவாதிகளாகக் காட்டிக் கொள்கின்றவர்கள் - சேர்ந்து இயங்குகின்றவர்கள் - ஒன்றாக இந்த முயற்சியைத் திரும்பவும் தோற்கடிப்பார்கள்.

இதற்காகத்தான் வன்முறைகளைப் புகழும் கலாசாரத்திலிருந்து நாங்கள் விலக வேண்டும் என்று நான் சொல்லியிருந்தேன்.

எனினும் எனது பேச்சைப் பிரசுரிக்காத ஒரு பத்திரிகை இதை மட்டும் தெளிவாகப் பெரிதாகப் பிரசுரித்திருக்கின்றது.

அப்படி நான் கூறினால், இவர் ஏதோ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஏதோ கூறுகின்றார் என வியாக்கியானப் படுத்துவார்கள். அது அப்படியல்ல.

ஒரு கால கட்டத்தில் எமது மக்களைப் பாதுகாப்பதற்கான தேவை ஏற்பட்டபோது இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். அந்த அறிக்கையில் அதைக் குறிப்பிட்டும் உள்ளேன். அந்த விடயத்தைப் பற்றி நான் பேசவில்லை. இன்றைக்கு அப்படியான ஒரு போராட்டம் இல்லை.

எங்களுக்கு கிடைப்பதை நாங்களே தடுப்பதா?

ஆகவே, திரும்பத் திரும்ப நான் கூறுகின்றேன். நேற்று, முந்த நாள் மஹிந்த ராஜபக்ஷ கூறியமை போல - விடுதலைப் புலிகளின் ஆரம்பகாலம்தனக்கு ஞாபகம் வருகிறது என்று அவர் கூறுகின்றமை போல - எங்களுக்குக் கிடைக்க இருக்கின்ற, கிடைக்கவேண்டியநியாயமான தீர்வை இல்லாமல்செய்வதற்கு செய்யப்படுகின்ற முயற்சிகளுக்கு நாங்கள் பலியாகக் கூடாது.

எங்களுக்குக் கிடைக்க வேண்டியதை கிடைக்கக் கூடியதைத் தடுப்பதற்கு நாம் துணை போய்விடக்கூடாது.

எமது இந்தத் தீர்வு முயற்சி கைகூட வேண்டும் என்பதால், நாங்கள் பேச்சு மேசையில் அமர்ந்து பேரம் பேசுவது மட்டுமல்ல - அதில் நாம் ஒன்றையும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை, அதை நான் திரும்பவும் திட்டவட்டமாகச் சொல்கின்றேன். - அந்தப் பேச்சு மட்டும் போதாது.

வடக்கிலும் தெற்கிலும்

அச்சமயத்தில் நாட்டில் இருக்கின்ற சூழலில் என்ன நடக்கின்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

அந்த முயற்சி செயலிழந்து போவது போல தெற்கிலும் பிரசாரம். இங்கும்எல்லாவற்றையும் கைவிட்டுவிட்டார்கள் என்று பிரசாரம்.

யார் சொன்னது நாம் கைவிட்டு விட்டோம் என்று? அறிக்கை வெளியாகும் போது தெரியும் நாம் எதையும் கைவிடவில்லை என்று.

இணைப்பு

இணைப்பு உடனடியாகச் சாத்தியமில்லை என்று நாம் கூறுவது உண்மை.

யாராவது 'நாளைக்கு இணைப்பு சாத்தியம்; நாங்கள் செய்து தருகிறோம்! என்ற கூறினால் முன்னால் வாருங்கள் செய்து காட்டுங்கள்.

இணைப்பு சாத்தியமாவதற்காக நாம் ஒரு வழிமுறையை வைக்கின்றோமோ தவிர, இன்றைக்கு இணைப்பைத் தாருங்கள், இல்லையேல் இன்றைக்கும், நாளைக்கும் என்றைக்கும் அது இல்லை என்று தடுப்பதற்கல்ல எமது நடவடிக்கை.

அத்தோடு சேர்ந்து அதிகாரப் பகிர்வும் சாக்கடைக்குள் போக விடநாம் தயாரில்லை. நாங்கள் பொறுப்பாகச் செயற்பட வேண்டும்.

காணி, பொலிஸ் அதிகாரம், கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் மீறப் பெறப்பட முடியாத விதத்திலே இருக்கின்ற ஓர் அர்த்தமுள்ள அதிகாரப் பொறிமுறையை ஏற்படுத்துவதான் எங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பு.

மக்கள் எழுச்சி அவசியமானது

தெற்கில் அதனைக் குழப்புகின்ற சக்தியை எமது கருத்துக்களை உரிய முறையில் கூறி சமாளிக்க வேண்டும்.

ஆனால், இங்கு குழப்புபவர்கள் குறித்து நீங்கள் ஏதாவது செய்யலாம். இங்கே இருந்து கொண்டு வேண்டுமென்றே பொய்ப்பிரசாரத்தில் ஈடுபடுகின்றவர்களை - பொலிஸாரை வாளால் வெட்டுகின்றவர்கள் - சம்பந்தமாக நீங்கள் ஏதாவது செய்யலாம்.

ஓர் மக்கள் எழுச்சி ஏற்பட்டால்தான் இதைத் தடுக்கலாம். இல்லையேல் நாங்கள்இங்கே எப்படி இருக்கின்றோமோ தெரியாது, வந்து எங்களில் ஐந்து பேரை வெட்டிவிட்டுப் போகலாம்.

இதை வெற்றிகரமாக முன்னெடுத்து, கொண்டு சேர்க்கின்ற பொறுப்பு எங்களிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. மக்கள் நிராகரித்தவர்களிடம் அல்ல.

தற்செயலாக இந்த அரசமைப்பு முயற்சி சரி வந்தவிடுமோ, வெற்றிகரமாக அமைந்து விடுமோ என்ற ஏக்கம் - பயம் - இப்போது அவர்களுக்குள் பிடித்துள்ளது. அதனால் பிதற்றுகின்றனர்.

அவர்கள் பிதற்றினாலும் எமது மக்கள் இறுதியாகச் சரியான முடிவை எடுப்பார்கள் என்று எமக்குத் திடமாகத் தெரியும்.

ஆனால், அவர்களின் செய்கைகள்தெற்கில்எதிரலைகளை ஏற்படுத்தும். அதை நாங்கள் அனுமதிக்க முடியாது. - என்றார். (உ)

ஸ்ரீலங்கன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லித்தியம்பட்டரிஅல்லதுகையடக்க தொலைபேசியினால் இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம்வெளியிடப்பட்டுள்ளது.

கொச்சி விமான நிலையத்தில் இருந்து நேற்று கொழும்பு நோக்கிப் பறந்து கொண்டிருந்த விமானத்தில், உணவுபரிமாற்றசேவை நிறைவடைந்த பின்னர், விமானத்தின் பின்புறம் பொதிகள் வைக்கப்பட்டிருக்கும் பகுதியில் இருந்து புகை வெளிவருவதை விமானப் பணியாளர்கள் அவதானித்துள்ளனர்.

அறை மேலாளர் மற்றும் கப்டனுக்கு இது தொடர்பாக உடனடியாக தகவல் தெரிவித்தனர். உடனடியாக விமான பணியாளர்கள் தீ அணைப்பான்களை எடுத்து தீ பரவும் பொதியின் மீது நீரைத் தெளித்துள்ளனர். அந்தப்

பக்கம் 03 »»

ரயில்வே..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டுநர்கள்இணைத்துகொள்ளப்படுவது உட்பட மேலும் சில கோரிக்கையை முன்வைத்தே தாங்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பில்ஈடுபட உள்ளனர் என அவர்கள் அங்கம் வகிக்கும் சங்கத்தின் செயலாளர் இந்திக தொடங்கொட தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியினருடன் இணைந்து செயற்படும்தொழிற் சங்கங்கள் அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளும் வகையிலும்இயல்புவாழ்க்கைக்கு பாதிப்பைஏற்படுத்தும்வகையிலும் அநீதியான போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றன என அரசாங்கம்குற்றம்சாட்டிவருகின்ற நிலையிலும் ரயில்வே தொழிற் சங்கம்இவ்வாறானபோராட்டத்தை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

வாள்வெட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயசுந்தர நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியிட்டார்.

கொக்குவிலில் வாள்வெட்டுத்தாக்குதலில் ஈடுபட்டோரைக் கண்டுபிடிப்பதற்கான தேடுதல் வேட்டையில் விசேட அதிரடிப் படையினரும் பரவலாகக் களமிறக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அதிரடிப் படையினர் பல இடங்களிலும் முனைப்பான நடவடிக்கைகளில் நேற்று ஈடுபட்டனர்.

அனைத்துப் படைத் தரப்பினர்களினதும் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்று, யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள சட்டம், ஒழுங்கு நெருக்கடியை உடனடியாகக் கட்டுப்பாட்டில் கொண்டு வருமாறு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சட்டம் - ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சர் ஆகியோர் தமக்குப் பணிப்புரை விடுத்துள்ளனர் என்று பொலிஸ்மா அதிபர் நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். (உ)

மாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவுக்குப் பயணம் செய்யவிருந்த ஜனாதிபதிக்கு எதிர்ப்புத்தெரிவிப்பார்கள்எனவும் கடந்த மே மாதம் 08 ஆம் திகதி யாழ். ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்தெரிவித்திருந்தார் எனக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் தென்பகுதியில்சில அமைப்புக்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு வருமாறுவடமாகாணசபைஉறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு கடந்த வாரம் அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் அதனை நிராகரித்ததுடன் யாழ்ப்பாணத்தில் வந்து விசாரணை மேற்கொள்ளுமாறும் கோரியிருந்தார்.

இந்த நிலையில் நேற்று கொழும்பிலிருந்து யாழ். வந்திருந்த விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவின் திட்டமிடப்பட்ட குற்றங்களை விசாரிக்கும் பிரிவினர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திலுள்ள குற்றத்தடுப்பு பிரிவிற்கு நேற்றுக் காலை 9 மணியளவில் மாகாணசபைஉறுப்பினர்எம்.கே. சிவாஜிலிங்கத்தை அழைத்து விசாரணைகளை மேற்கொண்டனர். சம்பவம்தொடர்பில்வாக்கு மூலத்தைப்பெற்றுக்கொண்டனர்.

இந்தஊடகசந்திப்பில்அவருடன் கலந்து கொண்டிருந்த வடமாகாணசபைஉறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை மற்றும் தியாகராஜா ஆகியோரும் நேற்று அழைக்கப்பட்டு அவர்களிடமும் வாக்குமூலம் பெறப்பட்டது.

யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டு கொள்ளாமல் இருக்கின்றது.'

- இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

'மஹிந்தவின் ஆட்சியில் யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இராணுவத்தினரும், பொலிஸாரும் தங்கள் கடமைகளை அச்சுறுத்தல் இல்லாமல் செய்தனர். ஆனால்இ மைத்திரி - ரணில் ஆட்சியில் எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

'யாழ்.குடாநாட்டில் வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. இது குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. தற்போது பொலிஸ் அதிகாரிகளையேதாக்கிவெட்டுமளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. எனவே, யாழ்.குடாநாட்டில் பாதுகாப்பு பலப்படுத்தப்படவேண்டும். அங்கு பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ள படையினர், பொலிஸார் ஆகியோரின் உயிருக்கு அரசு உத்தரவாதம் வழங்கவேண்டும்.

அதேவேளை, இந்தச் சம்பவங்களுடன் முன்னாள் போராளிகள் சம்பந்தப்பட்டுள்ளார்களா என்பது தொடர்பில் தீவிர விசாரணைகளை அரசு மேற்கொள்ளவேண்டும். புனர்வாழ்வு பெறாதா முன்னாள் போராளிகள் இவ்வாறான செயல்களில் ஈடுபடக்கூடும். இது தொடர்பில் அரசு உடன் கவனம் செலுத்தவேண்டும்' - என்றார்.

உலகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருத்த எடுப்பில் நடைபெறும்.

இருபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து இரு நூறுக்கும் அதிகமான பேராளர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் முதல் நாள் நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், ஆளுநர் ரெஜினோல்ட் குரே, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோர் பங்குபற்றுவர்.

யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆய்வரங்கு நடத்தப்படுகின்றது.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை யாழ். ரில்கோ விடுதியில் நடைபெறும் பொது நிகழ்வில் கவியரங்கம், கருத்தரங்கம், கலை நிகழ்வுகள், ஆவணக் கண்காட்சி, காவடி, கரகாட்டம், ஒயிலாட்டம், பறை, சங்கொலி, நடனம், தமிழிசை, இன்னிசை போன்ற கலை நிகழ்வுகள் இடம் பெறும்.

இரண்டாம்நிகழ்வில்நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், ஈ.சரவணபவன், அ.க.கோடீஸ்வரன், இராஜாங்க அமைச் சர் விஜயகலா மகேஸ்வரன்வடமாகாண சபைஅவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், இந்தியத் துணைத் தூதுவர்ஆநடராஜன்ஆகியோரும் பங்குபற்றுவர். (உ)

பதவியிழந்தார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிகஜன் பொலிஸ் சேவையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள் ளார் என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெய சுந்தர நேற்று யாழ்ப் பாணத்தில் வைத்துத் தெரிவித் தார்.

சிறிகஜன் கூடிய விரைவில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த சப்இன்ஸ்பெக்டர் அண்மைக் காலம் வரை யாழ்ப் பாணத்தில் பதவியில் இருந்த சமயம் 'சிங்கம் - 2' என்ற பெயரில் அட்டகாசம் பண்ணி வந்தவர் என யாழ். இளைஞர்கள் தரப்பில் பேசப்பட்டு வந்தது. (உ)

பிக்குகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனை கூறினார்.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களைத்தீவிரப்படுத்துவதற்பு, பௌத்த பிக்குகளின் பாரிய அமைப்பொன்றை உருவாக்கப் போவதாக முருத்தொட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார். பொரளையில் இன்று நடைபெற்ற தாய் நாட்டை பாதுகாக்கும்தேசிய சக்திகள் அமைப் பின்முதலாவதுஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

15 பிக்கு அமைப்புகளின் பங்களிப்புடன் இந்த பிக்குகள் அமைப்பு விரைவில் உருவாக்கப்பட உள்ளது. இதற்கு மகாநாயக்க தேரர்களின் ஆசியும் கிடைத்துள்ளது. மாற்றத்தை எதிர் பார்த்து மக்கள் இந்த அரசாங் கத்தை ஆட்சிக்கு கொண்டு வந் தனர். எனினும் நாட்டின் தேசிய வளங்களை விற்பனை செய்ய அதிகாரத்தை வழங்கவில்லை. அரசாங்கம் தேசிய வளங்களை விற்பனைசெய்து முன்னெடுத்து வரும் செயற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்துவதற்காக மிகப் பெரியபௌத்தபிக்குகள்அமைப்பை உருவாக்கஉள்ளதாகவும்ஆனந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

முருத்தெட்டுவே ஆனந்த தேரர் மகிந்த ராஜபக்ச ஆதரவாளர்களில் முக்கியமானவராவார்.

போட்டி போட்டுக்கொண்டு நுண்கடனை வாங்கி

தொலைக்காட்சி நாடகங்களைப் பார்ப்பதை விடுத்து நீர்சுத்திகரிப்பு இயந்திரங்களைப் பொருத்துங்கள்!

வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் வேண்டுகோள்

வவுனியா, ஓக. 01

போட்டி போட்டுக்கொண்டு நுண்நிதி கடனில் தொலைக் காட்சி நாடகங்களை பார்ப்பதை விடுத்து வீட்டுக்கொரு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை பொருத்துங்கள் என வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியாதாலிக்குளம் அ.த.க. பாடசாலையில்அமைக்கப்பட்ட குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை மாணவர்களின் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதி தியாகக் கலந்துகொண்டு உரை யாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று பலரும் நுண்நிதி கடன்களைப் பெற்று வீட்டில் தொலைக்காட்சிகளையும், 'டிஸ் அன்ரனா'க்களையும் பொருத்துவதில் ஆர்வம் காட்டு கின்றனர். இதனைவிட, வீட்டுக் கொரு வடிகட்டும் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்களைப் பொருத்துவதன்மூலம் சுத்த மானகுடிதண்ணீர் பருகமுடியும்.

தற்போது தொற்றாத நோயின் தாக்கம் எமது நாட்டிலும் உல களாவிய ரீதியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின் றது. அதிலும் குறிப்பாக நாள் பட்ட சிறுநீரகநோய்த் தாக்க முடையவர்கள் அண்மைக்கால மாக அதிகளவில் இனங்காணப் பட்டுள்ளனர்.

இலங்கையில் எட்டு மாவட் டங்கள் அதிகளவிலான சிறு நீரக நோயாளர்களை கொண்ட மாவட்டங்களாக இனங்காணப் பட்டுள்ளது. அதில் எமது மாகாணத்தில் வவுனியா மாவட் டமும், முல்லைத்தீவு மாவட்ட மும் அதிகளவிலான நோயாளர் களைக் கொண்ட மாவட்டங் களாக அடையாளங் காணப்பட் டுள்ளன.

இதற்கு பல காரணங்கள் இருந்தாலும் சுத்தமான குடிதண் ணீர் பருகாமையும் ஒரு காரண மாகக் கருதப்படுகின்றது.

சிறுவயதிலிருந்தே சுத்தமான குடிதண்ணீரைப் பருகுவதை ஊக்குவிக்கும் வகையில் பாட சாலைகளில் இவ்வாறான இயந் திரங்களை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

எனக்கு ஒதுக்கப்பட்ட மாகாண குறித்தொதுக்கப்பட்ட கொடை நிதியிலிருந்து இதுவரை 18 இற்கு மேற்பட்ட பாடசாலை களுக்கு இந்த இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. இவ் வருடமும் 7 பாடசாலைகளுக்கு இந்த இயந்திரம் பொருத்து வதற்குநடவடிக்கைஎடுக்கப்பட் டுள்ளது என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

பாடசாலை அதிபர் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ் வில், கிராமசேவைஉத்தியோகத் தர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(க-100)

தொடர் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து முல்லையில் நேற்று கவனவீர்ப்புப் பேரணி!

முல்லைத்தீவு, ஓக. 01

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் தொடர்ச்சியாக காணாமல் ஆக்கப்பட்டோருக்காகமேற்கொள்ளப் பட்டு வரும் தொடர் போராட்டங்க ளுக்கு ஆதரவு தெரிவித்து முல் லைத்தீவில் கவனவீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யுத்த காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலத்திலும் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களுக்காக அவர்களது உறவினர்களால் கோரிக் கைகள் முன்வைக்கப்பட்டு தொடர் போராட்டங்கள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையிலேயே இதற்கு ஆதரவு தெரிவித்து பெருந்திரளான மக்களின்பங்களிப்புடன்கவனவீர்ப்பு பேரணியொன்று நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றையும் மாவட்ட அரச அதிபரிடம் கையளித்தமை குறிப் பிடத்தக்கது.

(க)

மாகாண மட்ட போட்டிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஒக். 01

வருடந்தோறும் மாகாண மட்டத்தில்நடத்தப்பட்டுவரும் பண்ணிசை. கதாப்பிரசங் கம்,புராணப் படலம், கோலம் முதலான போட்டிகளுக்குரிய விண்ணப்பங்களை வடக்கு மாகாணக் கல்வித் திணைக் களம், வடக்கு மாகாணப் பாடசாலைகளிலிருந்து கோரி யுள்ளது.

போட்டிகள் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் நடத்த விருப்பதால், அதற்கு முன்னர் வலய மட்டத்தில் மேற்படி போட்டிகளை நடத்தி முதலா மிடத்தைப் பெற்றுக் கொண்ட மாணவர்களின் விவரங்களை அறிவிக்குமாறு, மாகாணக் கல்விப் பணிப்பாளர் கடிதம் மூலம் வலயக் கல்விப் பணிப் பாளர்களைப் பணித்துள்ளார். மாகாணமட்டப் போட்டிகள் நடைபெறும் இடம், திகதி என்பன பின்னர் அறிவிக்கப் படும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச)

கிளிநொச்சியில் குருதிக் கொடை

கிளிநொச்சி,ஓக.01

இலங்கை வங்கியின் கிளி நொச்சிக் கிளையின் 78 ஆவது ஆண்டுநிறைவைமுன்னிட்டு குருதிக்கொடை நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வங்கியில் இடம்பெறும். (ச)

ஆலய உற்சவங்கள்

சாவகச்சேரி,ஓக.01

மீசாலை கிழக்கு அருள்மிகு பன்றிக்கேணி கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த திங்களன்று ஆரம்பமாகியுள் ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 6 ஆம்திகதி ஞாயிறு முற்பகல் 10 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுநாள் திங்கட் கிழமைமுற்பகல் 11மணிக்கும் திருக் கல்யாண உற்சவம் செவ் வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும். (இ-22)

★★★

கோண்டாவில் காரைக்கால் ஸ்ரீவிசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி தேவஸ் தான மகோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

பன்னிரண்டு தினங்கள் இடம்பெறவுள்ள இந்த மகோற்சவத்தில் எதிர்வரும் 6ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக் குத் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (இ)

உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் குடும்பத்துக்கு வீடு வழங்கும் நீதிபதி இளஞ்செழியனின் நண்பர்கள்!

கொழும்பு, ஓக. 01

அண்மையில் நல்லூரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் குடும்பத்துக்கு, நீதி பதி இளஞ்செழியனின் நண்பர்கள் உதவி களை வழங்க முன்வந்துள்ளனர்.

சரத் ஹேமசந்திரவின் குடும்பத்துக்குப் புதிய வீடு ஒன்றை நிர்மாணித்துக் கொடுக்க நீதிபதி இளஞ்செழியனின் நண்பர்கள் தீர்மானித் துள்ளனர்.

அதற்கு மேலதிகமாக குடும்பத்தினருக்குத் தேவையான அடிப்படை உதவிகளை வழங்கவும் நண்பர்கள் இணங்கியுள்ளனர்.

நீதிபதி இளஞ்செழியன் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்ற நிலையில் அவரது பாடசாலை அவர்கள் மற்றும் வெளிநாட்டிலுள்ள தனவந்தர்களின் உதவியுடன் இந்த உதவிகள் வழங்கப்பட உள்ளன.

கடந்த 22 ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூர் பின் வீதியில் வைத்து நீதிபதி இளஞ் செழியனை இலக்கு வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பொலிஸ் சார்ஜன்ட் சரத் ஹேமச்சந்திர உயிரிழந்தமையுடன் பொலிஸ் உத்தியோகஸ்தர் விமலசிறி காயமடைந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



யாழ். நிலைமை; இன்று நடக்கும் அமைச்சரவையில்!

யாழ்ப்பாணத்தில்ஏற்பட்டுள்ளநெருக்கடிநிலைமை குறித்துஇன்றுகொழும்பில் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் விசேடமாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்ஹபீர்காசிம் நேற்று ஊடகவியலாளர்களிடம் இத்தகவலைத் தெரிவித்தார்.

தற்போதுயாழ்ப்பாணத்தில்ஏற்பட்டுள்ளநிலைமை குறித்து ஜனாதிபதியுடன் தாங்கள்விரிவாகஆராய்வர் என்றும்அவர்சொன்னார்.

காலைக்கதிர் Kalaikkathir

சசிகா லேணர்ஸ்

இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

021 221 7678, 077 614 0361

A/L எடுக்கும் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம் இந்தச் சிட்டையைப் பூர்த்தி செய்து வரும் மாணவர்களுக்கு சாரதியப் பயிற்சிக்கு விசேட கட்டணக் கழிவு வழங்கப்படும்.

பெயர் .....

முகவரி .....

.....

தொ.பே.இல.....

'சைட்டம்' எதிர்ப்பாளர்களின் 5 நாள் பாதயாத்திரை ஆரம்பம்

சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்முகமாகபல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டியிலிருந்து கொழும்புக்கு ஐந்துநாள்பாதயாத்திரையொன்றை நேற்று ஆரம்பித்திருக்கின்றது.

நேற்றுக் காலை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த இந்தப் பாதயாத்திரையில் சகல பல்கலைக்கழக மாணவர்கள், வைத்தியபீடமாணவர்கள்,உயர்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், கல்விமான்கள், கலைஞர்கள்உட்படப் பெருந்திரளானோர்கலந்துகொண்டுள்ளனர்.

கண்டியிலிருந்து கொழும்பை நோக்கிஐந்து நாள்கள்தொடரவுள்ள இந்தப் பாதயாத்திரை முதலாவதுநாளில்மாவனெல்ல, இரண்டாவது நாளில் நெலுந்தெனிய,மூன்றாவது நாளில் நிட்டம்புவ, நான்காவது நாளில் கடவத்தவழியாகஐந்தாவதுநாளில் கொழும்பை வந்தடையும்.

மாணவர்கள்மீது அரசு மேற்கொள்ளும் அடக்குமுறைகளை நிறுத்துதல், ருஹுணு பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவரை விடுதலைசெய்தல், சைட்டம் மருத்துவக் கல்லூரியை மூடுதல்உள்ளிட்டபல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப்பாதயாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ)

முல்லைத்தீவு – வற்றாப்பளையில் அரச மரத்தில் அம்மன் உருவம்

முல்லைத்தீவு, ஓக.01

முல்லைத்தீவு – வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் கிழக்கு மூலையில் காணப்படும் அரசமரத்தில் அம்மனின் உருவம் தோன்றியுள்ளமையால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆலயத்தில் ஆரம்பகாலம் தொட்டு பல்வேறு அதிசயங்கள் நிகழ்ந்து வருகின்றன என பக்தர்கள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் வேப்ப மரத்தில் இருந்து பால் வடிந்தது. நேற்றைய தினம் அரச மரத்தில் அம்மன் உருவம் தோன்றியது. இதை அறிந்த பக்தர்கள் ஆயிரக் கணக்காக அங்கு திரண்டு சென்று அந்த அற்புதத்தைப் பார்வையிட்டு வருகின்றனர். (மு-81)

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு 3 மாதத்தில் 1233 முறைப்பாடுகள்

2016ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் மாத்திரம்இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக்குழுவுக்கு 1233முறைப்பாடுகள்கிடைத்திருப்பதாகஆணைக்குழுவின் 2016ஆம் ஆண்டுஅறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக கிடைத்துள்ள முறைப்பாடுகளின் விவரங்கள் வருமாறு:-

கண்டி 244; மாத்தறை 170; அநுராதபுரம் 141; மட்டக்களப்பு 80; யாழ்ப்பாணம் 73; கல்முனை 78; வவுனியா 79; அம்பாறை 56; பதுளை 55; திருகோணமலை 45; ஏனைய மாவட்டங்கள் 202.

இவற்றுள் 680 முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கு உட்பட்டவை அல்ல.

132 முறைப்பாடுகளின் மீதான விசாரணைகள் முடிவடைந்துள்ளன. இந்தக் காலாண்டுப் பகுதியில் ஆணைக்குழுவுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு 67.9 மில்லியன் ரூபா எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவியுடன் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் 9 கோடி ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடத் தொகுதியை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன் நேற்று நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

பாடசாலையில் அதிபர் திருமதி விமலநாதன் தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற இந் நிகழ்வில் அமெரிக்கத் தூதரகத்தின் பணித் தலைமையக பிரதி அதிகாரி ரொபேட் கிள்ரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இதன் போது பாடசாலை அதிபரினால் அமெரிக்கத் தூதரக அதிகாரிக்கு நினைவுச் சின்னமொன்றும் வழங்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் உள்ளிட்ட கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

காரைநகர் கோவளத்தில் உள்ள நன்னீர்க் கிணற்றின் பாதை துப்புரவு

காரைநகர், ஓக.01

காரைநகர் கோவளத்தில்சீனோர்நன்னீர்க்கிணற்றுக்குச் செல்லும் பாதையொன்றை கோவளம் விளையாட்டுக் கழக வீரர்கள் சிரமதானம்மூலம் துப்புரவு செய்துள்ளனர்.

மேற்படி பாதை மக்கள் இடப்பெயர்வுக்குப்பின்னர், கடந்த 17 வருடங்களாக பயன்படுத்தப்படாமல்இருந்தமையால்முள்ளுப்பற்றைகள், செடிகளால் சூழப்பட்டிருந்தது. இதனால்மக்கள் வேறுபாதைகளால்சென்று நீர் எடுத்து வந்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோவளம் விளையாட்டுக் கழகம் முன்வந்து இந்தப் பாதையைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்துள்ளது.

காரைநகரில் பாழடைந்து, பாவனையற்று இருக்கும் கிணறு களைச் சுத்தம் செய்து அவற்றைப் பயன்பாட்டுக்கு விடுவதன் மூலம் வறட்சியில் இருந்து மீள முடியும் என மேற்படி விளையாட்டுக்கழகவீரர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (மு)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர நேற்று யாழ்.நகருக்கு வருகை தந்தபோது....

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.